பக்கங்கள்: பன்னிரண்டு

...ed as a News paper in Sri Lanka

# வலம்புரி

VALAMPURI

விலை ரூபா. 7.00

சங்கு 05 | வள்ளுவர் ஆண்டு 2035 | சித்திரை 10 | வியாழக்கிழமை | (22-04-2004) | தொலைபேசி - 2223378 | ஒலி 125

ராம்கோ சிமெந்து

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

ஆசியாக் கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது.

## 13வது பாராளுமன்றம் இன்று கூடுகிறது

# சுதந்திர முன்னணியின் ஆயுட்பலம் நீடிக்குமா?

## சபாநாயகராவது யார்?

(நமது நிருபர்)

**இலங்கையின் 13வது பாராளுமன்றத்தின் முதலாவது அமர்வின் அங்குரார்ப்பணக் கூட்டம் இன்று காலை சுபநேரமான 10.00 மணிக்கு நடைபெறவுள்ளது. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தலைமையிலான சிறுபான்மை அரசின் எதிர்காலம், இன்று நடைபெறவுள்ள சபாநாயகர் தெரிவு நிர்ணயிக்கும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.**

13வது பாராளுமன்றத்திற்குத் தெரிவுசெய்யப்பட்ட 196 உறுப்பினர்களினதும் 29 தேசியப் பட்டியல் உறுப்பினர்களதும் வரவு முதலில் பதிவுசெய்யப்படும். இதன் பின் 106 ஆசனங்களைப் பெற்று அமைச்சரவையை அமைத்துள்ள ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியும் 82 ஆசனங்களைப் பெற்று எதிரணியில் உள்ள ஐக்கிய தேசிய முன்னணியும் தத்தம் கட்

(12ஆம் பக்கம் பார்க்க)

## புளியங்குளம் பகுதியில் கிளைமோர் தாக்குதலா?

(வவுனியா)

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான புளியங்குளம் பகுதியில் வாகனம் ஒன்று கிளைமோர் தாக்குதலுக்கு இலக்கானதாக வெளியான ஊர்ஜிதமற்ற தகவலையடுத்து நேற்று மாலை பரபரப்பு ஏற்பட்டது.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் உள்ள வங்கி ஒன்றில் இருந்து பணம் எடுத்துச் செல்லப்பட்ட பஜிரோ வாகனம் ஒன்றே நேற்று மதியம் அளவில் தாக்குதலுக்கு இலக்கானதாக நேற்று மாலை தொலைக்காட்சி நிறுவனம் ஒன்று செய்தி ஒளிபரப்பியதாகக் கூறப்பட்டது.

(12ஆம் பக்கம் பார்க்க)

## டென்மார்க்கில் இருந்துவந்த குடும்பஸ்தர் விபத்தில் மரணம்

(கிளிநொச்சி)

டென்மார்க்கில் இருந்து யாழ்ப்பாணத்திற்குத் திரும்பிக்கொண்டிருந்த குடும்பஸ்தர் ஒருவர் விபத்தில் சிக்கி மரணமானார்.

நேற்று முன்தினம் பி.ப. 3.30 மணியளவில் இவ் விபத்துச் சம்பவம் இடம்பெற்றது.

சம்பவத்தில் அராலி தெற்கைச் சேர்ந்த முத்தையா சற்குணம் (வயது-58) என்பவரே விபத்தில் பரிதாபகரமாக உயிரிழந்தவராவார்.

சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது,

ஹயஸ் வான் ஒன்றில் கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் திரும்பிக்கொண்டிருந்த பிரஸ்தாப குடும்பஸ்தர் மாங்குளத்திற்கும் கனகராயன் குளத்திற்கும் இடையில் பிறிதொரு வாகனத்துடன் மோதி விபத்திற்குள்ளானதில் சம்பவ இடத்திலேயே மரணமானார்.

இவ் விபத்துச் சம்பவத்தில் மேலும் 5பேர் படுகாயமடைந்தனர் அவர்களின் பெயர் விபரம் வருமாறு,

எஸ்.நகுலேஸ்வரன் (வயது-38), யோகரட்ணம் நளினி (வயது-28), சிந்துஜா, அப்புத்துரை விஜயகுமார் (வயது-25), இந்திரகுமார் காயத்திரி (வயது-14). (த)

## ஜனாதிபதி தலைமையில் அமைச்சரவை கூடியது

## அமைச்சரவைப் பேச்சாளராக றெஜினோல்ட் கூரே நியமனம்

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பில் தேர்தலில் போட்டியிட்டுத் தோல்வியடைந்தவர்களுக்கும் அமைச்சர்களின் உறவினர்களிற்கும் முக்கிய பதவிகள் எதுவும் வழங்குவதில்லை என நேற்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் முதலாவது அமைச்சரைவைக் கூட்டம் ஜனாதிபதி செயலகத்தில் நேற்று நடைபெற்றபோதே மேற்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மேலும், அரசாங்கம் கேள்விப்பத்திரங்களைக் கோரும்போது அமைச்சர்களின் உபகுழுவின் அனுமதி பெறவேண்டும் எனவும் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

நிதி அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம நாட்டின் நிதி நிலை தொடர்பாக அமைச்சரவைக்கு விளக்கம் அளித்தார். அமைச்சரவையின் பேச்சாளராக தகவல்துறை அமைச்சர் றெஜினோல்ட் கூரே அமைச்சரவையினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

அமைச்சரவை தீர்மானங்களை வெளியிடமுன்பு ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்டுள்ள குழு ஒன்றுடன் ஆராய்ந்த பின்னரே வெளியிட வேண்டும் என்றும் இவர் பணிக்கப்பட்டுள்ளார்.

### அமைச்சரவை உபகுழு

இக்குழுவில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ மற்றும் அமைச்சர்களான பேரியல் அஷ்ரப், டக்ளஸ் தேவானந்தா, சரத் அமுனுகம, மங்கள சமரவீர, அதாவுல்லா ஆகியோரை ஜனாதிபதி நியமித்துள்ளார்.

இது இவ்வாறு இருக்க ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசில் இதுவரை அமைச்சுப் பொறுப்புக்களை ஏற்காத ஜே.வி.பி. சார்புடைய அமைச்சர்கள் எவரும் கலந்துகொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

## ஜே.வி.பியினர் கேட்கும் அமைச்சுக்களை வழங்குக

### ஹெல உறுமய அரசுக்கு அறிவுரை

(கொழும்பு)

ஜே.வி.பியினருக்குச் சரியான அமைச்சுக்களை வழங்கி தற்போதைய முட்டுக்கட்டை நிலைக்கு முற்றுப் புள்ளி வைக்குமாறு ஹெல உறுமயத் தலைவர் எல்லாவல மேதானந்த தேரர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

முன்னைய அரசாங்கத்தில் இருந்ததைப் போல தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம் கலாசார அமைச்சின் கீழேயே இடம்பெற வேண்டும் என்ற நிலைப்பாட்டை ஜே.வி.பி. கொண்டுள்ளது. அவர்களுக்குச் சரியானதை அவர்களுக்கே வழங்குமாறு நான் சுதந்திரக் கட்சியினருக்கு அறிவுரை கூறுகின்றேன்.

எமக்குப் 13வது பாராளுமன்றில் அரசாங்கத்தால் சபாநாயகர் பதவி வழங்கப்பட்டால், அதனை ஏற்றுக்கொள்வோம். அதேபோன்று எதிர்க்கட்சியினர் சபாநாயகர் பதவியை அளித்தால் அதனையும் ஏற்றுக்கொள்வோம். சிறுபான்மை அரசொன்று அமைத்தால் சபாநாயகர் பதவியானது மிக முக்கியமானது. எதிர்க்கட்சியினர் லொக்கு

(12ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்க்கூட்டமைப்பு எம்.பிக்கள்

## தமிழரின் பாரம்பரிய உடையுடன் பாராளுமன்றத்திற்கு இன்று செல்வர்

இன்று கூடவுள்ள இலங்கையின் 13வது பாராளுமன்றத்தின் முதலாவது அமர்விற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்கள் அனைவரும் தமிழர்களின் பாரம்பரிய உடையுடன் செல்வதற்குத் தீர்மானித்துள்ளனர்.

நடந்துமுடிந்த பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் வெற்றிபெற்ற தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் 22 பாராளுமன்ற உறுப்பினர்களுமே இவ்வாறு தமிழரின் பாரம்பரிய உடையில் செல்லவுள்ளனர்.

தமிழர்களின் சுயநிர்ணய உரிமை, தமிழ்த்தேசிய இனம், தன்னாட்சி உரிமை ஆகிய கோட்பாடுகளை முன்வைத்து வெற்றிபெற்ற பாராளுமன்ற உறுப்பினர்கள் தமிழர்களின் தனித்துவமான பாரம்பரியம் மற்றும் கலாசாரம் என்பவற்றை வெளிக்காட்டும் வகையில் நடந்துகொள்ளப் போவதாக கூட்டமைப்பின் முக்கியஸ்தர் ஒருவர் தெரிவித்தார். (ச)

## ஜனாதிபதியுடன் பிரதமர் பேச்சு

(கொழும்பு)

அமைச்சுப் பொறுப்புக்களைப் பங்கீடு செய்வதில் ஏற்பட்டுள்ள இழுபறிகளை முடிவுக்குக் கொண்டுவரும் வகையில் கடந்த செவ்வாய் இரவு ஜனாதிபதியும், பிரதமர் ராஜபக்ஷவும் பேச்சுக்களை நடத்தியுள்ளனர். ஜே.வி.பியினரின் கடும் எதிர்ப்புகளிற்கு மத்தியில்

(12ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவச் சீருடை தயாரித்த தமிழர் கைது

(கொழும்பு)

சட்டவிரோதமான முறையில் இராணுவச் சீருடை தயாரித்த தமிழர் ஒருவர் வெள்ளவத்தையில் உள்ள விருந்தினர்கள் விடுதியொன்றில் வைத்து நேற்றுக்

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஹெல உறுமய பிக்குகள் இருவர் இராஜிநாமா?

(கொழும்பு)

ஜாதிக ஹெல உறுமய சார்பில் போட்டியிட்டு பாராளுமன்றத்திற்குத் தெரிவாகிய 2 பௌத்த பிக்குகள் தமது இராஜிநாமாக் கடிதத்தைச் சமர்ப்பித்துள்ளனர். இவை பாராளுமன்றச் செயலாளர் பிரியானி விஜயசேகரவினால் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளன என பாராளுமன்ற வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

10ஆயிரத்து 512 விருப்பு வாக்குகளுடன் கொழும்பிலிருந்து தெரிவாகிய வண. கடலுவே ரட்னாசிய தேரர், 7ஆயிரத்து 389 விருப்பு வாக்குகளுடன் தெரிவாகிய கம்பஹாவைச் சேர்ந்த அபரேக பஞ்ஞானந்த தேரர் ஆகியோரே இராஜிநாமா கடிதத்தை சமர்ப்பித்துள்ளனர் என கூறப்பட்டிருப்பினும் மேற்படி இருவரும் பாராளுமன்ற அதிகாரிகளைச் சந்தித்து தாம் இராஜிநாமாச் செய்யவில்லை என அறிவித்துள்ளதாகவும் பாராளுமன்ற வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.ம.சு. முன்னணி அரசின் சபாநாயகர் வேட்பாளராக டி.யூ. குணசேகரா

13வது பாராளுமன்றத்தின் சபாநாயகராக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சார்பில் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த டி.யூ. குணசேகராவையும், சபை முதல்வராக அனுரா பண்டாரநாயக்கவையும் ஆளும் கட்சியின் பிரதம கொறடாவாக ஜெயராஜ்பெர்னாண்டோ பிள்ளையும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

பிரதமமந்திரி மகிந்த ராஜபக்ஷவின் தலைமையில் நேற்று நடைபெற்ற கூட்டத்தில் ஆளும் ஐக்கிய சுதந்திர முன்னணியின் சகல நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்துகொண்டிருந்தனர்.

இக்கூட்டத்தில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ இன்று பாராளுமன்றம் கூடும்போது எவ்விதம் நடந்துகொள்ள வேண்டும் என்பது தொடர்பாக உறுப்பினர்களுக்கு எடுத்துக் கூறியுள்ளார்.(ம)

## கூட்டமைப்பு எம்.பிக்கள் கிழக்கிற்கு செல்வர்

(கிளிநொச்சி)

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் கிழக்கு மாகாணத்திற்கான விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளனர்.

இப்பயணம் அடுத்த வாரமளவில் இடம்பெறலாம் எனத் தெரி

(12ஆம் பக்கம் பார்க்க)

# ஜனாதிபதி சந்திரிகாவின் சர்வாதிகாரப் போக்கை எதிர்த்து

# போர்க்கொடி தூக்கத் தயங்கோம்

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாட்டை விளக்குகிறார் யாழ்.மாவட்ட எம்.பி.சுரேஸ் பிறேமச்சந்திரன்

(கொழும்பு)

**ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தனக்கு மக்கள் ஆணை வழங்கியுள்ளதால், தான் அரசியல் யாப்பை சீர்திருத்தப் போவதாக தற்போது கூறிவருகின்றார்.**

**உண்மையிலேயே ஜனாதிபதிக்கு சிங்கள மக்கள் மாத்திரம் தான் ஆணை வழங்கியிருக்கின்றார்கள். தமிழ் மக்கள் 'எவரும் ஆணை வழங்கவில்லை என்பதை அவர் புரிந்து கொள்ள வேண்டும்.**

இவ்வாறு தெரிவித்துள்ளார் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன்.

ஊடகம் ஒன்றிற்கு வழங்கிய விசேட பேட்டியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவரது பேட்டியின் தொகுப்பு வருமாறு,

**மக்கள் ஆணை**

தமிழ் மக்களில் 96வீதத்திற்கு மேலானவர்கள் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு ஆணை வழங்கியிருக்கின்றார்கள்.

இந்த ஆணையை தற்போதைய அரசு ஏற்றுக்கொள்ள மறுத்தால், தமிழ் மக்கள் கொடுத்த ஆணையின் மீது சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க மறுத்தால் அதனால் நட்டப்படப்போவது சிங்கள தேசம் என்பதையும் அரசு புரிந்துகொள்ளவேண்டும்.

இதை ஏன் நான் இங்கு வலியுறுத்திக் கூறவிரும்புகின்றேன் என்றால,

தமிழீழ விடுதலைப்புலிகள் ஒரு பேச்சுவார்த்தையூடாக பிரச்சினையைத் தீர்ப்பதற்குத் தயாராக இருக்கின்றார்கள் என்ற அடிப்படையில் தான் தன்னாட்சி அதிகாரசபைக்கான ஆலோசனைகளை முன்வைத்தார்கள்.

இதனை ஒரு மூலையில் வைத்துவிட்டு நான் எனது சொந்த நலன்களைத தான் கவனிக்கப்போகின்றேன் என்ற வகையில் செயற்பட ஜனாதிபதி முனைந்தால், அதற்கு சிங்கள தேசம் ஆதரவாக இருந்தால் "உங்கள் நிலையை நீங்கள் பார்க்க வேண்டும்" என எம்மை ஓரங்கட்டுவதாகத்தான் அர்த்தப்படும்.

**தனிநாடு உருவாகும்**

அத்துடன் ஜனநாயக ரீதியில் இராஜதந்திர அடிப்படையில் சாவதேச சமூகத்தின் ஒத்துழைப்புடன் இலங்கை அரசாங்கமே எமக்கு தனிநாட்டைத் தரவேண்டிய நிலை கூட உருவாகலாம்.

இதேவேளை, தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு, முன்னர் நாலு கட்சிகளைக் கொண்ட ஒரு வெறுமையான கூட்டமைப்பாக இருந்தது.

ஆனால் தற்போது அப்படியில்லை. தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும்- தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கும் இடையில் கொள்கை சம்பந்தமான புரிந்துணர்வுகள் காணப்படுகின்றன.

அதுமட்டுமன்றி பரந்துபட்ட வெகுஜன அமைப்புக்களுடன் கூட்டமைப்பு இணைந்து செயற்படுகின்றது.

இதேசமயம், வட-கிழக்கில் உருவாகியுள்ள பிரச்சினை கொழும்பில இருந்து பார்க்கக்கூடிய அளவுக்கு ஒரு சாதாரண பிரச்சினை அல்ல.

அந்தப பிரச்சினையை ஜனநாயக ரீதியில் முன்னா எப்போதும் இல்லாத வகையில அதனைக் கையாள வேண்டிய நிலையில் உள்ளது.

அத்துடன், தமிழ் மக்கள் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு அந்த ஆணையைக் கொடுத்திருக்கின்றார்கள்.

அந்த ஆணையை நிச்சயமாகத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புப் பயனுள்ள வகையில் பயன்படுத்தும் என நம்புகின்றேன்.

**சிங்களவரின் உரிமையைத் தட்டிப்பறிக்கவில்லை.**

அது மட்டுமன்றி இந்தியா, அமெரிக்கா போன்ற வல்லரசு நாடுகளுக்கு நாம்மது மக்களின் நியாயமான கோரிக்கைகளைப் பற்றி எடுத்துக் கூறவிருக்கின்றோம்.



சிங்கள மக்களின் உரிமையை நாம் கேட்கவில்லை. அவர்களின் பிரதேசத்தை எமக்குத் தருமாறு நாம் கேட்கவில்லை என்பதை அந்த நாடுகளுக்குத் தெளிவாக எடுத்துக் கூறவுள்ளோம்.

இதற்கிடையில், ஜனாதிபதி தான் மாத்திரம்தான் இந்த நாட்டு மக்களின் நலன்களைக் கவனிக்கலாம். தான்மட்டும் தான் இந்த நாட்டிற்கு தலைவி. ஏனையவர்களுக்கு எந்த விதமான சம்பந்தமும் இல்லை எனும் போக்கில் நடப்பாராயின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அவருக்கு எதிராகக் காத்திரமான, வலுவான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதைக குறிப்பிடவிரும்புகின்றேன் என்றார். (உ-61,10)

# ஐ.தே.மு. பாராளுமன்ற உறுப்பினர்கள் ஐ.ம.சு.மு.தலைமையுடன் சந்திப்பு

(கொழும்பு)

முன்னாள் கிழக்கு மாகாணத்தின் அமைச்சர் உட்பட பல ஐ.தே.மு. பாராளுமன்ற உறுப்பினர்கள் ஐ.ம.சு.மு.தலைமையுடன் பேச்சுக்களை நடாத்தியுள்ளதாக சிறீகோதா வட்டாரங்கள் தெரிவித்தன.

முன்னாள் அமைச்சர் ஒருவர் ஜனாதிபதியுடன் பேச்சுக்களை நடாத்தியுள்ள அதேவேளை, 4 ஐ.தே.க.பாராளுமன்ற உறுப்பினாகள் ஜனாதிபதியின் உயர் ஆலோசகருடன் தொடர்ந்து தொடர்புகளை ஏற்படுத்தி வந்துள்ளதாகவும் ஐ.தே.மு.வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இவற்றைவிட மத்திய மாகாணத்தைச் சேர்ந்த ஐ.தே.முவின் இளம பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரும் ஜனாதிபதியுடன் பேச்சுக்களை நடாத்தவுள்ளார்.

ஆனால், இத்தகைய பேச்சுக்கள் எவ்விடயம் தொடர்பாக இடம பெற்றன என்பதுபற்றித் தமக்குத் தெரியவில்லை என்றும் ஐ.தே.மு. வட்டாரங்கள் தெரிவித்தன. இவர்கள் கட்சி மாறலாம் அல்லது தேசிய அரசாங்கம் அமைக்கும் நடவடிக்கைகளுடன் தொடர்புபட்டிருக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் கிழக்கு மாகாண அமைச்சர் ஜனாதிபதியுடன் கலந்துரையாடிய விடயத்தை ஐ.தே.க. தலைமைக்கு அறிவிக்கவில்லை என்றும் ஆனால், புதிய எம்.பிதான் ஜனாதிபதியை சந்திக்கப் போகும் விடயத்தை கட்சித் தலைமைக்குத தெரியப்படுத்தியிருந்தார் என்றும் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

அத்துடன், இச்சந்திப்புகளின் போது யார் யாருக்கு ஆதரவு அளிப்பது என்றும், இன்று பாராளுமன்றம் கூடும்போது எவ்வாறு சிறுபான்மை ஐ.ம.சு.மு. அரசாங்கம் சபாநாயகர் தெரிவில் பெரும்பான்மையை பெறுவது என்பதுபற்றியும் கலந்துரையாடப்பட்டுள்ளதாக உத்தியோகப்பற்றற்ற தகவல்கள் தெரிவித்துள்ளன. (உ-6)

# இரவு வேளைகளில் மர்மக் கும்பல் நடமாட்டம்

(மருதங்கேணி)

சாவகச்சேரி சரசாலைப் பகுதியில் இரவு வேளையில் நடமாடும் மர்மக் கும்பல் ஒன்றினால் அந்தப் பகுதி மக்களிடையே பெரும் பீதி ஏற்பட்டுள்ளது.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னர் படையினர் வெளியேறிய குடியிருப்புப் பகுதிகளிலேயே இந்த மர்மக கும்பலின் நடமாட்டம் காணப்படுவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இது இவ்வாறிருக்க இந்த வாரமுற்பகுதியில் வீடொன்றில் கொள்ளையிட முற்பட்ட கும்பல் ஒன்று வீட்டார் விழித்துக் கொண்டதும் தப்பி ஓடியவேளை துரத்திப் பிடிகக முற்பட்ட போது கொள்ளையாகள் துப்பாக்கி வேட்டுக்களைத தீாதது எச்சரித்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(உ-35)

# கொழும்பு பிரதி முதல்வரை பதவி நீக்கக் கோரிக்கை

(கொழும்பு)

கொழும்பு மாநகர சபையின் பிரதி முதல்வரை பதவி நீக்குமாறு கோரி ஐக்கிய தேசியக்கட்சியின் மாநகரசபை அங்கத்தவர்கள் மனுவொன்றை அனுப்பியுளளனா.

கொழும்பு மாநகரசபையின் பிரதி முதல்வர் கிறீன்பாத்தில் உள்ள மாநகரசபைக்குச் சொந்தமான காணி ஒன்றை தனியார் வர்த்தகர் ஒருவரின் தொழில் முயற்சிக்காக ஒதுக்கீடு செய்ய முயற்சித்துள்ளார்.

இதனை ஐக்கியதேசியக்கட்சியின் அங்கத்தவர்கள் தடுத்துள்ளனா. இருநத போதிலும் இது தொடர்பான பிரேரணை கடந்த 3 மாதங்களுக்கு முன்னர் மாநகரசபைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. ஆனால் இதற்கான அங்கீகாரம் இன்னமும் வழங்கப்படவில்லை.

இதன் காரணமாக கொழும்பு மாநகரசபை அங்கத்தவர்களுக் கிடையே பிளவு ஏற்பட்டுள்ளது என அம்மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. (தி)

# மாணவரைக் கௌரவிக்கும் கொமர்ஷல் வங்கி

(யாழ்ப்பாணம்)

நடைபெற்றுமுடிந்த தரம் 5 புலமைப்பரிசுப் பரீட்சையில சித்தியடைந்த மாணவர்களைக் கொமர்ஷல் வங்கி கௌரவிக்கவிருக்கின்றது.

இது தொடர்பிலான கௌரவிப்பு வைபவம் ஒன்று எதிர்வரும் 25ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப.10.30மணிக்கு வங்கியின் யாழ். ஆஸ்பத்திரி வீதியிலுள்ள கிளையில் நடைபெறவிருப்பதாக வங்கியின் முகாமையாளர் ஆர். ரவீந்திரா அறிவித்துள்ளார். (யே)

# புலமைப்பரிசில் விண்ணப்பம் கோரல்

(கொழும்பு)

தோட்டத் தொழிலாளர்களின் கல்வி வளர்ச்சிக்காக இந்தியத் தூதரகத்தினால் வழங்கப்பட்டு வரும் புலமைப்பரிசிலுக்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

இதற்கமைய க.பொ.த.(சா.த) பரீட்சையில் சித்தியடைந்து, க.பொ.த.(உ/த)க்கு தெரிவாகியுள்ள மாணவர்கள் இப்புலமைப்பரிசிலுக்கு விண்ணப்பிக்க முடியும்.

2004-01-01 அன்று 25வயதுக்கு மேற்படாத தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகள் மாத்திரமே இதற்கு விண்ணப்பிக்க முடியும்.

இவ்விண்ணப்பங்கள் யாவும் எதிர்வரும் மே மாதம் 30ஆம் திகதிக்கு முன்னர் இலங்கையில் உள்ள இந்தியத் தூதரகத்துக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும். (தி-63)

## வடமேல் மாகாணசபை

# தேர்தல் பிரசாரங்கள் நள்ளிரவுடன் நிறைவு

(கொழும்பு)

எதிர்வரும் 24ஆம் திகதி நடைபெறவுள்ள வடமேல் மாகாண சபைக்கான தேர்தல் பிரசாரங்கள் யாவும நேற்று நள்ளிரவுடன் நிறைவடைந்துள்ளன.

தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸ்ஸநாயக்கவின் அறிவிப்பின்படி கூட்டம் கூடுதல், ஊர்வலங்கள் நடத்துதல், தேர்தல் தொடர்பான துண்டுப்பிரசுரங்கள் முதலியவற்றை ஒட்டுவதற்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

இதனை மீறிச் செயற்படுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என தேர்தல் திணைக்களப் பொலிஸ் பிரிவினர் எச்சரித்துள்ளனர்.

இத் தேர்தலை முன்னிட்டு புத்தளம், சிலாபம் ஆகிய பிரதேசங்களில் பொலிஸ் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபட்டுள்ளனர்.(கி-63)

# கனவுக் கருவியின் உதவியுடன்

நித்திரைப் பிரியர்களுக்கு ஒரு நற்செய்தி. தூங்குபவர்களின் முழுமையான விருப்பப்படி இசையுடனும், நறுமணத்துடனும், அனைத்து உணர்வுகளுடனும் காணமுடிகிறது.

படுக்கைக்குச் செல்ல தெரிவிக்கின்றனர்.

நித்திரை செய்ய ஆயத்தமாகுபவர்கள் இந்தக் கருவியை இயக்கியவுடன் அது மெல்லிசையையும் லேசான ஒளியையும் வெளிவிட்டு அவர்களைத் தூங்க வைத்துவிடுகின்றது. நபர் நித்திரை செய்ய ஆரம்பித்து வேகமாக மூச்சுவிடவும் இக்கருவியை இயக்கத்தொடங்கி அடுத்த 8 மணி வரையான நேரத்தில் அவரின் உறக்கத்திற்கு பொருத்தமானதாக செயல்படுகிறது. அந்த நபர் விரும்பிய கனவுகள் மனத்திரையில் தோன்றிக் கொண்டிருக்கும்



# வண்ண வண்ணக் கனவுகள்

தாம் விரும்பும் வகையான கனவுகளைத் தாமே உருவாக்கி கண்டு மகிழ்வதற்கு வசதியாக புதிய இயந்திரம் ஒன்று புத்தாக்கம் செய்யப்பட்டுள்ளது.

இது ஒரு பகல் கனவு அல்ல. நிஜக் கனவுதான். உதாரணமாக தனக்குப் பிடித்த திரை நட்சத்திரத்துடன் ஒரு உல்லாச சந்திப்பு, ஒலிம்பிக் விளையாட்டில் தங்கப் பதக்கம் வெல்லுதல் போன்ற ஒரு நிகழ்வு, போன்ற கனவுகளை ஒரு கருவியின் துணையுடன் உருவாக்கி காண்பதற்கு தொழில் நுட்பம் துணை செய்கிறது.

35 அங்குல உயரம் கொண்ட இக் கருவியை ஜப்பானைச் சேர்ந்த விளையாட்டுப் பொருட்கள் தயாரிக்கும் நிறுவனம் வடிவமைத்துள்ளது. ஜப்பானிய மொழியில் 'யுமெமி கோபோ' என்னும் பெயர் இந்த இலத்திரனியல் கருவிக்கு சூட்டப்பட்டுள்ளது. இதற்கு கனவுகளின் தொழிற்சாலை என்று பொருள். இப்புதிய கருவியில் ஒருவரின் குரலைப் பதிவு செய்யும் வசதி, மின்னொளிர் விளக்குகள், படம் பார்க்கக் கூடிய திரை, நறுமணம், பின்னிசை, ஒலிபெருக்கிகள், ஒரு கடிகாரம் என்பன உண்டு. இவற்றைக் கொண்டே நித்திரை செய்ய விரும்பியவர் தனக்கு பிடித்த கனவுகளை முன்னர் நீங்கள் ஒருசில நிமிடங்களை இக்கருவியுடன் செலவு செய்வீர்கள். பின்னர் உறக்கத்திற்கு செல்லும் நீங்கள் இந்திரலோகம் வரை அழைத்துச் செல்லப்படுவீர்கள். முதலில் எமக்குப்பிடித்தமான கனவின் முக்கிய கட்டம் ஒன்றின் படத்தை இக்கருவியில் இணைத்துவிடல் வேண்டும். பின்னர் இப்படத்திலேயே கவனம் முழுவதையும் செலுத்தி தமது கனவினை விபரிக்கக்கூடிய முக்கியமான சொற்களை கூறுவதோடு அவற்றை அக்கருவியில் பதிவுசெய்தலும் வேண்டும். அந்தக் கனவு நிகழ்வது போல உணர்வுகளை வைத்துக்கொள்ளுதலும் வேண்டும். அடுத்ததாக விரும்பிய நறுமணத்தை தெரிவுசெய்தல் வேண்டும். தொடர்ந்து விருப்பமான இசையினையும் நாமே தெரிவு செய்துவிடல் வேண்டும்.

நறுமணமும் இசையும் எவ்வாறு மனிதர்களில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை ஆராய்ந்த நிபுணர்களின் முடிவுகளை அடிப்படையாகக் கொண்டே இத்தொழில்நுட்பங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. ஏனெனில், இவற்றின் பின்னணியில் தர்க்கரீதியான காரணங்கள் உள்ளன என்று இதன் தயாரிப்பாளர் வேளையில் அவர்களின் கட்கோளங்கள் துரிதமாக அசைந்துகொள்ளும். உற்சாகத்தின் கனவு தோன்றும் பகுதி சுமார் ஒரு மணி அல்லது ஒன்றரை மணி நேரம் வரையாக இருக்கும். இதுவே கனவு கட்டுப்பாட்டுக் கருவி. சுறுசுறுப்பாக இயங்கும் நேரமாகும். இவ்வேளை குறிப்பிட்ட இசையை ஒலிப்பதுடன் குறிப்பிட்ட நறுமணத்தையும்

**தாரா**

தேவைக்கேற்றபடி இக்கருவி வெளிவிடுகின்றது. அத்துடன் பதிவு செய்யப்பட்டிருந்த வார்த்தைகளையும் திரும்பத் திரும்ப ஒலித்துக் காட்டுகிறது. இதுவே கனவுக்கான உகந்த சூழ்நிலை ஆகும். இதைவிட ஒவ்வொரு மணித்தியாலமும் கடந்து செல்லும்போது அதனையும் இக்கருவி கணிப்பிட்டு வைத்துக்கொள்ளும். இதுவே இக்கருவியின் அதி உச்சப் பயன்பாடு. கனவு காண்பவர் இதனால் நிம்மதியான ஒரு உற்சாகத்தை இழப்பதில்லை. இது கவனச்சிதைவை ஏற்படுத்துவதும் இல்லை. இனிமையான கனவுகளே மிஞ்சுகின்றன.

*நன்றி: தமிழ் உலகம*

# வீதி விபத்தைத் தவிர்க்க ஏ—9 வீதியில் புதிய ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் அடிக்கடி இடம்பெற்றுவரும் வீதிவிபத்துக்களைத் தவிர்க்கும் பொருட்டு கண்டி பிரதான வீதியில் நாவற்குழியில் இருந்து சுண்டுக்குளி பஸ்ரியன் வீதி வரையும் புதிய நேரான பாதை ஒன்றினை அமைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இப்புதிய பாதை அரியாலை கொழும்புத்துறை ஊடாக பஸ்ரீயன் வீதியை அடையும் வகையில் அமைக்கப்படுவதுடன், வாகனங்களின் போக்குவரத்து ஒரு வழியாகவே அமையும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போதுள்ள பிரதான கண்டி வீதியில் கூடுதலான வளைவுகள் இருப்பதால் வாகன விபத்துக்கள் அடிக்கடி இடம் பெற்று அநியாய உயிரிழப்புகள் ஏற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

இதேசமயம், யாழ்ப்பாண மாவட்டத்தில் வீதிகள் அமைக்கும் பணிக்கு எதிர்காலத்தில் தென் பகுதியில் இருந்து கருங்கல்லைக் கொண்டு வருவது பற்றியும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

அத்துடன், யுத்தத்தின் போது சேதமடைந்த நாவற்குழி, கைதடிப் பாலங்கள் கப்திட்டத்தின் கீழ் புனரமைப்புச் செய்யப்படவுள்ளதாகவும் தெரிய வருகின்றது.

## இலங்கை- கனடா

# புலமை பரிசிலுக்கு விண்ணப்பிக்கலாம்

(கொழும்பு)

இலங்கை-கனடா புலமைப் பரிசில் மன்றம் உள்ளூர் மாணவர்களிடம் இருந்து புலமைப் பரிசிலைப் பெறுவதற்கான விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

இதற்கு விண்ணப்பிப்பவர்கள் குறைந்ததகைமையாக கடந்த கல்வி பொதுதாரதர சாதாரண தரப் பரீட்சையில் 5 பாடங்களில் விசேட சித்தி பெற்றிருப்பதுடன், வறுமை கோட்டின் கீழ் வாழ்பவராக இருத்தல் வேண்டும்

விண்ணப்பங்களை ஒருங்கிணைப்புச் செயலாளர் இலங்கை -கனடா புலமைப்பரிசில் மன்றம் இல:392/2 பெரேரா மாவத்தை கொட்டேகொட, இராஜகிரிய என்ற முகவரிக்கு அனுப்ப முடியும்.

அத்துடன், இது தொடர்பான மேலதிக விபரங்களைப் பெறவிரும்புவோர் 2877950 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(உ-60,10)

**யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின்**

# 12ஆவது ஆண்டு விழா

# 2ஆம் நாள் நிகழ்ச்சிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்பாண விஞ்ஞான சங்கத்தின் 2ஆம் நாள் காலை நிகழ்ச்சியாக இன்று கலாநிதி (திருமதி) சிவமதி சிவச்சந்திரன் அவர்களின் தலைமையிலும், பேராசிரியர் கே.கந்தசாமி அவர்களின் தலைமையிலும் இரு ஆய்வரங்குகள் நூலகக் கேட்போர் கூடத்திலும், பௌதிகத்துறை மண்டபத்திலும் இடம பெறவுள்ளன. மேற்படி ஆய்வரங்கில் பல்வேறு துறை சார்ந்து 21 ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்படவுள்ளன.

மாலை அமர்வுகள் பிற்பகல் 2.00 மணிக்கும் பேராசிரியர் சி.சிவஞானசுந்தரம் (நந்தி) அவர்கள் தலைமையில் இடம் பெறவுள்ளது. இவ்வமர்வில் கலாநிதி கே.சிவபாலன் அவர்கள் இன விருத்திச் சுகாதாரம் என்னும் பொருளிலும், கலாநிதி (திருமதி) கே.சுப்பிரமணியம் உடலுக்குள் உட்செலுத்தி பரிசோதிக்கும் மருத்துவ ஆய்வுகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் என்னும் தலைப்பிலும் உரையாற்றவுள்ளனர்.

(யே)

# தாயகம் திரும்பும் நாளை எண்ணி யாழ்.சிறையில் 54 தமிழக மீனவர்கள்

(யாழ்ப்பாணம்)

வடபகுதிக் கடலில் அத்துமீறி நுழைந்து சட்டவிரோதமாக கடற்றொழிலில் ஈடுபட்டமை காரணமாக பாதுகாப்புப் படையினரால் கைதுசெய்யப்பட்ட மொத்தம் 67 தமிழக மீனவர்கள் பல மாதங்களாக யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் இருந்து வருகின்றனர்.

இவர்களுள் 54 தமிழக மீனவர்களின் நீதிமன்ற வழக்கு விசாரணைகள் பூர்த்தியடைந்த நிலையில், தமிழகத்துக்கு அனுப்பப்படுவதற்கான வாய்ப்புக்களுக்காக காத்திருக்கின்றனர்.

இதேசமயம், ஏனைய 13 தமிழக மீனவர்களும் நீதிமன்ற வழக்கு விசாரணைக்காக சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

வழக்கு விசாரணை பூர்த்தியடைந்த நிலையில் இருக்கும் 54 தமிழக மீனவர்களின் படகுகள் மற்றும் வலைகள் யாவும் ஊர்காவற்றுறையில் தடுத்து வைக்கப்பட்ட நிலையில் இருப்பதாகவும் தெரியவருகிறது.

(உ-16)

# விடுவிக்கப்படாத பகுதிகளுக்கு மின்சாரம் வழங்க நடவடிக்கை

(கொழும்பு)

வடபகுதியில் உள்ள விடுவிக்கப்படாத பகுதிகளுக்கு மின்சாரத்தை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கை மின்சார சபையின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் இதுபற்றி கருத்துத் தெரிவிக்கையில்,

சுன்னாகம் மின் உற்பத்தி நிலையத்தில் இருந்து விடுவிக்கப்படாத பகுதிகளுக்கு மின்விநியோகம் நடைபெறுவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின் கீழ் பளை, முகமாலை பகுதிகளில் வாழும் குடும்பங்களும் மின்சாரத்தைப் பெறவிருக்கின்றனர்.

அத்துடன், ஏ-9 வீதியில் உள்ள இராணுவச் சோதனைசசாவடிகளுக்கும் மின்சாரம் வழங்கப்படவுள்ளது.

இதனால், பொது மக்கள் 24 மணி நேரமும் இவ்வீதியைப் பயன்படுத்த முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

(உ-60,10)

# தௌபீக்கை தேசியப்பட்டியல் எம்.பியாக்க கோரிக்கை

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கே.எம்.தௌபீக்குக்கு தேசியப்பட்டியல் மூலம் இடம் வழங்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தோப்பூர், மூதூர் பிரதேச அமைப்பாளர்கள் மற்றும் ஆதரவாளர்கள் ஒன்றிணைந்து இவ்வேண்டுகோளை விடுத்துள்ளனர்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீமை அவரது இல்லத்தில் சந்தித்தபோது நூற்றுக்கணக்கான ஆதரவாளர்கள் இவ்வேண்டுகோளை நிறைவேற்றுமாறு கோரியுள்ளனர்.

இச்சந்திப்பின்போது கட்சியின் வளர்ச்சி குறித்தும், பல முக்கிய விடயங்கள் குறித்தும் ஆராயப்பட்டன. (தி-63)

# சிறந்த மாணவர்களை உருவாக்க

## சிறப்பான சில ஆலோசனைகள்

நல்ல மாணவன் என்பவன், நல்லிணக்கங்களையும், நற்பண்புகளையும் கொண்டு உடையார் முன்னில்லான் போலப் பணிவுடன் கற்கும் பாங்குடைய இலக்கணங்களைக் கொண்டவன் தான் என்று சிலரும், நிறைப் புள்ளிகளைப் பெறுக் கல்வியால் சிறந்து விளங்குபவன் தான் என்று பலரும் பதிலளித்துள்ளனர்.

நுண்ணறிவுக்கும், தேர்வில் வெற்றிபெறுவதற்கும் நேரிடையான தொடர்பு உள்ளது என்பது உள்வியல் சோதனைகளின் முடிவாகும். இருப்பினும் நுண்ணறிவு அதிகமுடைய மாணவர்கள் குறைவான புள்ளிகள் பெறுவதற்கும் தேர்வில் தோல்வியடைவதற்கும் காரணம் என்னவென்று ஆராய்ந்ததில், சில உண்மைகள் புலனாகின்றன. ஊக்கமின்மை, ஆர்வமின்மை, பெற்றோர்களின் கல்வி, பொருளாதார நிலை, சமூக அந்தஸ்து, படிக்கும் பழக்கமின்மை, கவனக் குறைவு போன்றவை அவற்றுக்குக் காரணமாக உள்ளன (என்பது அறியப்பட்டுள்ளது). குடும்பப் பிரச்சினைகள், பணப்பற்றாக்குறை மனவெழுச்சிப் போராட்டங்கள் ஆகியவற்றால் பாதிக்கப்பட்டுள்ள மாணவர்கள் பலர் தங்களின் இக் குறைகளை நிறைவு செய்யும் வகையில் அதிக புள்ளிகள் பெற்று வகுப்பில் முதல் மாணவர்களாகத் திகழ்வதையும் கல்வியாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

நல்ல மாணவன் என்பவன் அரம் போல கூர்மையான அறிவை மட்டும் பெற்றிருந்தால் போதாது; மக்கள் பண்பும், ஒழுக்கமும் வேண்டும் என்கிறது வள்ளுவம். இதையே உளவியலாளரும் கூறுகின்றனர். படிக்கவேண்டும் என்ற ஆர்வமில்லையாயின் எவ்வளவு முயன்றாலும் அவனைக் கற்க வைப்பது மிகவும் சிரமமான செயல் என்கிறார்கள். அமெரிக்கக் கல்லூரி மாணவர் வளர்ச்சி மைய உளவியலாளர்கள். குதிரையைத் தண்ணீர் குடிக்கக் குட்டைக்கு அழைத்துச் செல்ல முடியுமே தவிர, குடிக்க வைக்க முடியாது. ஆனால் மாணவன் அவ்வாறு இல்லை... அவனுக்குக் கல்வியினால் பெறப்படுகின்ற பலன்களையும், ஒளிமயமான எதிர்கால நம்பிக்கையையும் புரியவைப்பதன் மூலம் அவனைப் படிப்பில் ஆர்வமடையச் செய்யலாம். இவனுக்கு எழுத்துப் பிழை அதிகமாக வருகிறது. இவனுக்குக் கணிதம் சுட்டுப்போட்டாலும் வராது எனப் பெற்றோரும், ஆசிரியர்களும் ஆழுத்தமான முத்திரையைக் குத்தி, அவனது மனத்தில் 'தன்னால் இயலாது' எனும் முட்டுக் கட்டையைப் போட்டுவிடுகிறார்கள். முயன்றால் முடியாதது எதுவுமில்லை என அவனுக்கு ஊக்கமும் உச்சாகமும் அளிக்கவேண்டும்.

ஒரு மாணவன் பத்தாவது வகுப்பு வரை கணிதத்தில் குறைவானபுள்ளிகள் பெற்று வந்தான். வேறு பள்ளிக்கூடம் சென்றுபயிலத தொடங்கிய பின் அப் பள்ளியில் கணிதத்தில் முதல் மாணவனாகத் திகழ்ந்தான். அதில் ஆசிரியரின் பங்கும், கற்பிக்கும் பாங்கும் அடங்கும் எனவே பாடத்தில் ஆர்வத்தை ஊட்டுவது பெற்றோரின் பணி மட்டுமல்லாது, ஆசிரியர்களின் கடமையுமாகும்.

### ஒருமித்த கவனம்

கற்றல் திறமைக்குறைவான குழந்தைகளின் பிரச்சினைகள் பற்றி ஒரு கருத்தரங்கில் பல பெற்றோர்கள் ஒரு நிலைப்படுத்திய கவனத்தை எவ்வாறு ஏற்படுத்துவது எனக்கேட்டனர். சில மாணவர்கள் புத்த கத்தைத் திறந்து வைத்துக் கொண்டு, பகற்கனவில் மூழ்கி விடுவார்கள். மேசையை மாற்றிப் போடுவார்கள். நடந்து கொண்டே படிப்பார்கள். இடத்தை மாற்றுவார்கள் இப்படி பலவிதமான நடவடிக்கைகளில் ஈடுபடுவார்கள்.

ஒரு மித்த கவனத்திற்காக இவ்வாறு செய்யலாம்; ஒரு பேனாவை முதலில் மாணவனிடம் கொடுங்கள் - அதனை ஒரு நிமிடம் பார்க்கச் சொல்லுங்கள். பின்பு அதன் பெயர், மூடி என்ன நிறம் போன்ற வினாக்களைக் கேளுங்கள் சிலவற்றுக்கே அவர்களால் பதில் தரமுடியும். பின்னர் வேறு ஒரு பேனாவைக் கொடுத்து - (அல்லது வேறு ஒரு மாணவரிடம்) ஒவ்வொரு பொருளாக பாகமாக உற்றுநோக்கி அது பற்றி எண்ணச் சொல்லுங்கள். ஒரு நிமிடம் கழித்து கேள்விகளைக் கேட்டால் அதிகமான பதில்களைச் சரியாகச் சொல்வார்கள்.

படிக்கும் போது பகற்கனவு காண்பவர்கள் பெரும்பாலும் தங்களின் நண்பர்-செலவுக்குப்பணம், சினிமா, விளையாட்டு, பிணக்குகள் போன்றவற்றைப் பற்றியே கற்பனை செய்கின்றனர் என்கிறார் ஓர் ஆராய்ச்சியாளர் எனவே, பிரச்சினையைப் பற்றிய 'அறிவு' 'தெளிவு' ஆகியவற்றை அவர்களுக்குக் கூறுவது, மற்றவர்களது கடமை என்கின்றார். கவனம் செலுத்த முடியாமைக்குக் காரணம் கவனச்சிதறலாகும். மாணவன் தனக்கு ஏற்படும். கற்பனை உலகின் சஞ்சரிப்புப் பற்றிய விஷயங்களை ஒவ்வொரு முறையும் எழுதி வைத்துக் கொள்ளவேண்டும். வாரக்கடைசியில் அவற்றைத் திரும்பப் பார்த்து எண்நடவடிக்கை எடுத் தால், இந்தப் பகற்கனவிலிருந்து மீளமுடியும் எனச் சிந்திக்கவேண்டும். அல்லது கல்வி ஆலோசகரிடமோ, உளவியலாளரிடமோ ஆலோசனை பெறவேண்டும். இது போன்று மேலை நாடுகளில் கடைப்பிடிக்கின்றனர்.

ஒருமித்த கனவத்திற்கு அடுத்து தேவையானது, ஆர்வமாகும். படிப்பதைப் புரிந்து கொள்வதும், தொடர்பு ஏற்படுத்திக் கொண்டு படிப்பதும், கருத்தின் பின்னணி, புலன்காட்சி ஆகியவற்றை உணர்ந்து கொண்டு படிப்பதும் பயன் தருவனவாகும்.

தமிழைப் பாடமொழியாகக் கொண்டு பள்ளி இறுதி வகுப்பு வரை படித்துவிட்டு, கல்லூரிக்கு வந்தவுடன் ஆங்கிலப் பயிற்று மொழியில் பயில்வதில் பல மாணவர்கள் ஆர்வம் இழந்துவிடுவதைக் காண்கிறோம். நல்ல நுண்ணறிவு சிந்தனைத்திறன், நினைவு ஆற்றல் ஆகியவை பெற்றிருந்தும் ஆங்கிலக் கலைச் சொற்களைப் புரிந்துகொள்ள முடியாமலும், ஆங்கிலத்தில் விரிவுரைகள் நடாத்தப்படுவதால் தெளிவு பெற முடியாமலும் துன்புறுகின்றனர். குறிப்பாக இருபாலினரும் பயிலும் கல்லூரிகளில் தனக்கு ஆங்கிலம் தெரியவில்லை எனக் கூறினால் பார்ப்பவர்கள் என்ன நினைப்பார்களோ என்ற தாழ்வு மனப்பான்மையால் தெரிந்தவர்கள் போல் நடித்து தங்களையே ஏமாற்றிக் கொள்ளும் மாணவர்களும் உள்ளனர். அவர்களுக்குப் தமிழிழே படிப்பித்து தமிழில் விடையெழுத அனுமதி தந்து தேர்வு எழுதச் செய்து திருத்திப் பார்த்ததில் கணிசமான புள்ளிகள் பெற்றிருந்தனர்.

ஒருமுறை நல்ல புள்ளிகள் பெற்ற மாணவன் இயல்பாகவே அந்தப்பாடத்தில் ஆர்வம் கொள்ள விளைகிறான். வெற்றிவாகை, ஆர்வத்தை ஊட்டும் என்பது எவ்வளவு உண்மை என்பது தெரியும், ஆர்வத்தையும், ஈடுபாட்டையும் வளர்க்க உதவும், மற்றொருமுறை - மாணவர்களை முன் கூட்டியே படிக்கச் சொல்லி, பின்னர் அந்தப் பாடத்தினை நடத்துவது ஆகும் ஆனால் சில ஆசிரியர்கள் அவன் படித்து விட்டு வந்துவிட்டால் நாம் பதில் சொல்லி விளக்கவேண்டி வருமே என அஞ்சி, வேறு பாடத்தை நடத்தி விடுகின்றனர்.

வேண்டா வெறுப்பும், அக்கறையின்மையும் கொண்ட மாணவர்களையும் சந்திக்கிறோம். இவர்களுக்குத் தனிப்பட்ட உளநல ஆலோசனை நிச்சயமாகத் தேவைப்படுகிறது.

### கால அட்டவணை

சிலர் கடைசி நேரத்தில் படித்துக் கொள்ளலாம். இன்னும் நான்கு மாதங்கள் உள்ளன; எவ்வளவோ நேரம் இருக்கிறது. எனத் தள்ளிப் போட்டுக் கொண்டே செல்வார்கள். ஆனால் படிக்கும் முறையும், பழக்கமும் என்ற ஆய்வில் கண்ட உண்மை. யாதெனின், தினமும் குறிப்பிட்டநேரம் இதனைப் படிப்பது, இன்ன வேலை செய்வது எனத் திட்டமிட்டுப் படிப்பவர்கள் நல்ல புள்ளிகளைப் பெற்றுள்ளனர் என்பதே ஆகும்!

வகுப்பில் முதல் இடத்தைப் பிடித்துக் கொள்வது, குறிப்புகள் எழுதிக் கொள்வது, ஐய்யங்களைக் கேட்டுத் தெளிவு பெறுவது, படிப்பதற்கென, அமைதியான இடத்தைக் கொள்வது, வகுப்பிற்கு முன், அன்று நடக்கப்போகும் பாடத்தைப் பற்றித் தெரிந்து கொள்வது, விரிவுரை முடிந்த பின்னர் சில மணித்துளிகள் படிப்பது ஆகியவை நல்ல பலனைத் தந்துள்ளன. எனவே வகுப்பு முடியுமுன் சற்று நேரம், ஆசிரியர் மாணவர்களை அன்று நடத்திய பாடங்களைப் படிக்கச் செய்வது இன்றியமையாததாகும்.

### வகுப்புச் சூழ்நிலை

வகுப்புச் சூழ்நிலை படிப்பதற்கு ஏற்றவகையில் அமைய வேண்டும். சில பள்ளிகளில் வகுப்புகள் நடந்து கொண்டு இருக்கும் போதே விளையாட்டு வகுப்பும், அருகிலேயே நடக்கும். இதனால் மாணவனின் கவனம் சிதற வாய்ப்புண்டு. எத்தகைய இடையூறுகளிலும், இரச்சலிலும் கவனம் சிதறாது பயிலும் மாணவர்களும் உள்ளனர். அவர்கள் மிகச்சிலரே யாவர். வகுப்பறை போதுமான வெளிச்சமும், காற்றோட்டமும் உடையதாக இருக்கவேண்டும்.

### படிக்கும் பழக்கம்

படிப்பது என்பது ஒரு கலை. அதற்கான ஆர்வத்தைக் குழந்தைப் பருவம் முதல் எற்படுத்த வேண்டும். சிலர் விரைவாகவும், புரிந்து கொண்டும் படிப்பார்கள். சிலரால் புரிந்து கொள்ள முடியாது. படிக்கும் பாடத்தைப் பிரித்து பொருள் உள்ள பகுதிகளாகக் கொண்டு படிப்பது சால்புடையதாகும். எனவே, மாணவனின் படிக்கும் ஆற்றலை, அளவிட்டு அதனை மேம்படுத்த முடியும். போதனைக் கருவிகளும், படிக்கும் செய்தியின் அளவை அளவிடும் கருவிகளும் உள்ளன. பின் தங்கியவரென ஒரு நிமிடத்தில் 100 முதல் 150 வார்த்தைகளைப் படிப்பவரைக் குறிப்பிடுகிறோம். அவரால் எழிதில் புரிந்து கொள்ள முடிவதில்லை. முன்பு படித்த எழுத்துக்களைக் கண்களால் பின் நோக்கிக் காண விளைபவர்கள், ஒரு சொற் தொடரைப் படிக்க 6 அல்லது 7 முறை கண்களை அசைக்கிறார்கள். , அவர்கள் படிப்பதற்கு நாக்கு, தொண்டை குரல்வளை ஆகியவற்றை அதிகமாக அசைக்கிறார்கள்; இதன் காரணமாகச் சோர்வடைகின்றனர் என்பது ஆய்வு முடிவாகும். படிக்கும் நூலின் தன்மையைப் பொறுத்து படித்து முடிக்கும் காலம் வேறுபடும். ஒருவர் ஒரு நிமிடத்தில் 40 வார்த்தைகளும் படிக்கலாம். அதே நபர் ஆயிரம் வார்த்தைகளையும் படிக்க முடியுமென்று கண்டுள்ளனர். படிக்கும் போது கண்ணிலை நிறுத்தப்பட வேண்டும். படிக்கும் வார்த்தை மீது குத்திட்டு நிற்கவேண்டும். வேகமாகப் படிப்பவரால் ஓரிரு கண் அசைவிலேயே ஒரு சொற்றொடரைப் படித்துப் புரிந்துகொள்ள முடிகிறது. உதடுகளை அசைக்காமல், நூலாசிரியரோடு அவரும் சேர்ந்து படித்துப் புரிந்துகொள்கிறார் என்கிறார் நார்மன் லிபிஸ் (நன்றாகவும், வேகமாகவும் படிப்பது எப்படி என்ற நூலில்) 15 அல்லது 20 நிமிடத்திற்குப் படித்த பின்பு அதனைத் திரும்ப மனதில் கொண்டு எழுதிப் பார்ப்பது நல்லது என்கிறார். படிக்கும் பாடங்களை பொருள் பொதிந்த சிறுபகுதிகளாகப் பிரித்துப் படிக்கவேண்டும். புதிய சொற்களையும் அவற்றைப் பயன்படுத்தும் வகைகளையும் தெரிந்து கொள்ளவேண்டும்.

### பரீட்சை எழுதுவது எப்படி?

பெரும்பாலும் நமது தேர்வுகள் எழுத்துத் தேர்வாக இருப்பதால் மாணவர் கற்றதைத் திறம்பட, தெளிவாக தேர்வுத் தாள்களில் எழுதுவது மிக முக்கியமாகும். அழகானவர்கள் எப்போதும் திறமைசாலிகள் அல்லர் என்பது போல அழகான கையெழுத்தை உடையவர்கள் அனைவரும் திறமைசாலிகள் இல்லை; எனினும் தேர்வுத் தாள்களைத் திருத்தும் போது தெளிவான கையெழுதது உடையவர்களுக்கு அதிக புள்ளிகள் அளிக்கவே தோன்றுகிறது. எனவே பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்கு கையெழுத்துப் பயிற்சி அளிக்கவேண்டும். முன்பு இதற்கென தனியான வகுப்புக்கள் பாலர் பள்ளியில் இருக்கும். முதலில்வினாக்களை நன்கு படிக்க வேண்டும். எழுதுமுன் என்ன கருத்தைச் சொல்லப் போகிறோம் எனச் சிந்திக்கவேண்டும். நீங்கள் எழுதப் போகும் கருத்துகளுக்கும் பதிலுக்கும் ஆதாரம் உள்ளனவா என மனக் கண்முன் நிறுத்திக் கொள்ளுங்கள், பின்னர் எழுதுங்கள். எழுதுவது என்பது எழிதான செயல் இல்லை. கருத்துத் தெளிவும், அறிவும் அதிகமான படிப்பறிவும் வேண்டும்.

### நினைவில் கொள்வதுஎப்படி?

படிக்கும் முறையைச் செம்மையாகக் கொள்வதே நினைவில் கொள்ளும் ஆற்றலை வளர்க்க உதவும். நினைவினைக் குறுகிய கால நினைவு என்றும், நீண்டகால நினைவு என்றும் பகுத்துள்ளனர். படிக்கும் செய்தியின் பொருளை உணர்ந்து கொள்ள வேண்டும். நினைவில் கொண்டதைத் திரும்பவும் மீட்டுக் கொள்ளல் எனும் முறையில் எண்ணிப் பார்க்க வேண்டும் தொடர்ந்து படிக்காமல் இடைவெளிவிட்டு, படித்ததை மனதில் அசைபோடவேண்டும். திரும்பத்திரும்பப் படித்தலும், வாய்விட்டு உரக்கப்படித்தலும், முக்கியமான பகுதிகளைக் குறித்துக் கொள்வதும் பயன் தருவனவாகும். நினைவாற்றலை வளர்த்துக்கொள்ள PQ 4 R முறையை வலியுறுத்திக் கொள்கின்றனர். அதாவது முன்னோட்டம் (Preview) படிக்கும் போதே சில வினாக்களை நாமே எழுப்பிக் கொண்டு தெளிவு பெறுவது (Question), 4R என்பது படித்தல் (Read), எண்ணிப்பார்த்தல் (Reflect), திரும்பக் கூறிப பார்த்தல் (Recite), மறுமுறை படித்தல் (Review) என்பனவற்றைக் கடைப்பிடிக்கவேண்டும் மீண்டும் மீண்டும் படிப்பதும் (Over-learning) நல்ல பலனைத் தருகிறது.

பெயர்களையும், முகங்களையும் நினைவில் கொள்ளும் ஆற்றல் அனைவருக்கும் நன்மை தருவதாகும். குழந்தைப் பருவத்தில் இவ்வாற்றல் அதிகமாக இருக்கும். எனவே இதனைக் குறையாமல் வளர்த்துக் கொள்ள வேண்டும். இதனால் பிறரோடு நெருக்கமான உறவையும், நட்பையும் வளர்த்துக் கொள்ள இயலும்.

### புதுமைச் சிந்தனை

மாணவர்கள் புதுமையான, கட்டுபாடற்ற விதங்களில் பிரச்சினைகளைஆணுகக்கற்றுக் கொள்ள வேண்டும். இதற்கு ஆக் கச்சிந்தனை உதவும். ஆக்கச் சிந்தனையில் சிறந்து விளங்கும் மக்களைக் கொண்ட நாடே தலை சிறந்து விளங்கும் என்கிறார் அர்னால்டு டன்பீ. ஆக்கச் சிந்தனை 4 நிலைகளைக் கொண்டது. என்கிறார் கிரகாம் வாலஸ், பிரச்சினை பற்றிய முன்யோசனை, அலசி ஆராய்வது பலகோணங்களில் சிந்திப்பது முதல் நிலையாகும். அதைப் பற்றியே சிந்தித்து அடிமனதில் போட்டு அடைகாப்பது இரண்டாம் நிலையாகும், சான்றாக பயணம் செய்யும் போதும், சும்மா இருக்கும் போதும், எண்ணவோட்டங்களைத் தட்டி விடுவது, பிரச்சினையின் தீர்வுக்கு உதவலாம் என்கிறார். அறிஞர் பலர் தம் கனவிலேயே பல தீர்வுகளையும் சூந்திரங்களையும் கண்டுள்ளதை நாம் அறிவோம், மூன்றாம் நிலையில், உள்ளொளி என்பதாகும் மனதில் திடீரென புதுவழி பிறக்கும். இவ்வாறு இப்பிரச்சினையைச சமாளிக்கலாம். 4ஆம் நிலையில் சரிசெய்து பார்த்தலும் பகுத்தாய்வு செய்தலும் அடங்கும் இவ் வகைச் சிந்தனை மூலம் பிரச்சினைக்குரிய விடையைக் கண்டு கொள்ள முடியும்.

**டாக்டர்.ஜி.ராஜமோகன்**

எனவே புதுமைச் சிந்தனையை வளர்க்க ஆசிரியர்கள் வழி வகை செய்திடவேண்டும்.

### மனிதர்கள் மூன்று வகை

மனிதர்களின் செயல்திறன் (பொழுதிற்கு) காலத்திற்கு ஏற்ப மாறுபடுவதை அறிந்து மூன்று வகைப்படுத்துகின்றனர். காலை வகையினர்: காலையில் சுறுசுறுப்பாக எழுவார்கள், புத்துணர்வோடு வேலைக்குச் செல்வார்கள், மதியம் விரைவாக வேலைகளை முடிப்பார்கள் - மாலையில் மயங்கி விடுவார்கள்.

மாலை வகையினர் : காலையில் படுக்கையை விட்டு எழுவதற்கு மனமே வராது, நடுப்பகலில் சுறுசுறுப்பைப் பெறுவார்கள் - மாலையில் மலைபோல வரும் வேலைகளையும் எளிதில் செய்து முடிப்பார்கள். இரவில் சோர்வுறுவார்கள்.இருவகை நிலையினர்: காலை யில் எழுந்து வேலைக்குச் செல் வர் - நண்பகலில் சேர்வும், பின்னர் திரும்பவும் உற்சாகமாக வேலை செய்யும் இயல்பினர்.

இவ்வகையாகச் செயற்படும் நிலை உடலின் தக அமைவை பொறுத்தும், பழக்கத்தைப் பொறுத்தும் அமைகின்றன. எனவே இவர்களைப் பயன்படுத்திக் கொள்வது ஆசிரியர்கள் அல்லது நிர்வாகிகள் கொள்ளும் அணுகுமுறையை பொறுத்ததேயாகும். □

# நாட்குறிப்பு எழுதும் பழக்கம் நற்பயன்களைப் பெற உதவும்



இயந்திரமயமான வாழ்வைக் கொண்ட உலகில் நாட்குறிப்பு எழுதும் வழக்கம் தற்போது அருகிவருகிறது. அனேகமானோர் இதனைத் தேவையற்ற ஒன்றாகவே நினைக்கின்றனர். தற்போதுள்ள ஆசிரியர்களும் இப்பழக்கத்தை மாணவர்களிடையே ஊக்குவிப்பதில்லை.

மாணவர்கள், குடும்பத் தலைவர், குடும்பத் தலைவியர் ஆகியோருடன் நில்லாது அனைத்துத் தரப்பினருக்கும் இதனால் பயனுண்டு. அன்றாட நிகழ்ச்சிகள் நாளை வரலாறாக அமைகின்றன. அவற்றைப் பதிந்து வைத்திருக்காவிட்டால் நாம் எமது வரலாற்றையே இழந்தவர்களாவோம்.

தினமும் நாம் பலபேரைச் சந்திக்கிறோம். பல விதமான செயற்பாடுகளில் ஈடுபடுகின்றோம். எம்மைத்தேடிப் பலர் வருகிறார்கள். நாம் பலரைத் தேடிச் சென்று சந்திக்கிறோம். இவை முறையாக தினக்குறிப்பில் எழுதிவைக்கப்பட்டால் அவற்றைத் திரும்ப எடுத்துப் பார்க்க முடியும்.

நமது அன்புக்குரிய உறவினர்கள், நண்பர்கள் ஆகியோரின் பிறந்ததினங்கள், நினைவு தினங்கள் என்பவற்றைக் கூட நாம் மறந்து போய்விடுகிறோம். இவற்றை நாட்குறிப்புப் புத்தகத்தில் பதிந்து கொண்டால் பின்னர் அவற்றைத்தேடி விசாரிக்க வேண்டியேற்படாது.

தற்போதைய உலகில் தொலைபேசிப் பாவனை

**சி. ஜெயகணேஷன்**
**ஆசிரியர்**

அதிகரித்துள்ளது. மிக சிரமப்பட்டுப் பிரயாணம் செய்து சந்திக்க வேண்டியோரை தொலைபேசியில் இலகுவாக சந்தித்து விடலாம். அதற்கு அவருடைய தொலைபேசி இலக்கமும், அவர் அத் தொலைபேசியின் அருகே இருக்கக்கூடிய நேரமும் எமக்குத் தெரிந்திருத்தல் அவசியம். இவற்றை நாம் குறித்து வைக்க தினக்குறிப்பே பொருத்தமானது.

உலகின் மூலை முடுக்குகளில் நடக்கும் செய்திகளை நாம் பலவாறாக அறிகிறோம். அன்றாடம் நாம் அறியும் செய்திகளை தினக்குறிப்பில் பதிந்து கொண்டால் எமக்கு ஒரு பொதுஅறிவுப் பொக்கிசமாக அவை அமைந்துவிடும். பின்னர் அவற்றை எடுத்துப்பார்க்கும் போது எமக்கே வியப்பாக இருக்கும்.

இவ்வாறான நன்மைகளைத் தரக்கூடிய நாட்குறிப்பெழுதும் பழக்கத்தை நாம் சிறுவயதிலிருந்தே ஆரம்பிக்க வேண்டும். பணம் சம்பந்தமான விடயங்களுக்காக மட்டும் நாட்குறிப்பு எழுதும் பழக்கம் தோன்றவில்லை என்பதை நாம் கவனத்தில் கொள்ளவேண்டும்.

# 5 மாகாணசபைகளின் காலம் மேயுடன் முடிவு

(கொழும்பு)

எதிர்வரும் மே மாதம் 6ஆம் திகதியுடன் 5 மாகாண சபைகளின் ஆட்சிக்காலம் முடிவடைகிறது.

இதற்கமைய நாளை வெள்ளிக்கிழமை முதல் சப்பிரகமுவ மற்றும் மத்திய மாகாண சபைகளின் ஆட்சிக் காலமும், எதிர்வரும் 26ஆம் திகதி திங்கட்கிழமையுடன் ஊவா மாகாண சபையின் ஆட்சிக் காலமும், அடுத்த மாதம் 6ஆம் திகதியுடன் வடமத்திய மாகாணம், மேல் மாகாணம் ஆகியவற்றின் ஆட்சிக் காலமும் முடிவடைகின்றன.

இதேவேளை, எதிர்வரும் 24ஆம் திகதி வடமேல் மாகாண சபையின். தேர்தல் நடைபெறவுள்ளது. இத்தேர்தலுக்கான அனைத்து முன் நடவடிக்கைகளும் முடிவடைந்துள்ளன.

ஏனைய மாகாண சபைகளின் தேர்தல்களையும் விரைவில் நடத்துவதற்கு தேர்தல் திணைக்களம் நடவடிக்கை எடுத்து வருவதாக தெரியவருகிறது.

(தி-63)

## சந்திப்பு

(பருத்தித்துறை)

இலங்கை சிந்மயா மிஷன் சுவாமி ரமண சைத்தன்யா யாழ். மாவட்டத்தில் சிநமயா மிஷன் பணிகளில் இணைந்து செயற்பட்ட இறை பணியாளர்களை நாளை வெள்ளிக்கிழமை சந்தித்து கலந்துரையாடவுள்ளார். நல்லை ஆதனத்தில் பி.ப. 1.00 மணிக்கு இந்தச் சந்திப்பு இடம் பெறவுள்ளது.

(உ-52)


## 103 வயது முதியவர் காலமானார்

(பருத்தித்துறை)

அம்பனில் வாழ்ந்து வந்த வயோதிபரொருவர் 103 வயதில் கடந்த புதுவருட தினத்தன்று மரணமானார்.

கேர்விந்தர் துரைச்சாமி (வயது-103) என்பவரே மரணமானவராவார். 6 பிள்ளைகளுக் குத் தந்தையான இவர், இறக்கும் வரை எந்தவிதமான நோய்களுக்கும் ஆளாகவில்லை. சுகதேகியாக இருந்த அவர் சம்பவ தினம் திடீர் மரணமானார்.

(உ-52)



நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தின் உயர்தர மாணவர் மன்ற ஒன்றுகூடல் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்.பல்கலைக்கழக பொருளியியற்துறை தலைவர் வி.பி.சிவநாதனுக்கு சிரேஷ்ட மாணவத் தலைவர் இ.அரவிந்தநாதன் நினைவுப் பரிசினை வழங்குவதைப் படத்தில் காணலாம்.

-படம்:பரு. நிருபர்-

# தமிழர்கள் தேவானந்தாவை தேடிப்போவது வெட்கம்!


## செல்வம் அடைக்கலநாதன்

(கொழும்பு)

தமிழர்களின் ஏகப்பிரதிநிதிகளாகப் புலிகளை அங்கீகரித்துத் தமிழ்த் தேசியத்தின் ஏகோபித்த ஒற்றுமையை உலகுக்கு வெளிப்படுத்திய தமிழர்கள் டக்ளஸ் தேவானந்தாவிடம் உதவி கேட்டுப்போவது வெட்கத்திற்கு உரியதும் விசனத்திற்கு உரியதுமாகும் என்று வன்னிப் பாராளுமன்ற உறுப்பினரும், தமிழரசுக் கட்சியின் பிரதம கொரடாவுமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

தற்போதைய இலங்கையின் அரசியல் நெருக்கடிகள் குறித்தும் தமிழரசுக் கட்சியின் உடனடி நடவடிக்கைகள் பற்றியும் கருத்துக் கேட்ட பொழுதே அவர் தமது கருத்துக்களை வெளியிட்டார்.

தொடர்ந்தும் கருத்துக் கூறிய அவர், தமிழமக்களின் புனர்வாழ்வுக்காக ஒதுக்கப்பட்ட பெருந்தொகைப் பணத்தில் சுகபோகம் அனுபவிக்கும டக்ளஸ் தேவானந்தா மீண்டும் அம்மையாரின் ஆசியுடன் அமைச்சராகியுள்ளார்.



தமிழ் தேசியத்திற்கும், தமிழரின் ஏகப்பிரதிநிதித்துவத்துக்கும் வாக்களித்த தமிழர்கள் தம்மால் ஒதுக்கப்பட்ட ஒருவரிடம் கையேந்திப்போவது மிகவும் வெட்கத்திற்கும், கேவலத்திற்கும், விசனத்திற்கும் உரிய செயலாகும்.

இந்த இழிவு தமிழருக்கு ஏற்படாதிருக்க டக்ளஸ் தேவதானந்தவை அமைச்சவையிலிருந்து வெளியேற்ற எம்மாலான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்வோம். தமிழரசுக் கட்சி இது தொடர்பில் மிக உறுதியாகச் செயற்படும் என்று செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

(யே)

## மணிமண்டபத்திற்கான அடிக்கல் நாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்த கல்லூரியின் பவள விழாவை முன்னிட்டு, கல்லூரியில் அமைக்கப்படவுள்ள சு.குமாரசாமி மணிமண்டபத்திற்கான அடிக்கல் நாட்டு நிகழ்வு எதிர்வரும் 24ஆம் திகதி சனிக்கிழமை நண்பகல் கல்லூரி அதிபர் வ.ஆறுமுகம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் கல்லூரியின் தர்மகர்த்தா சபைத்தலைவரும், யாழ். வலயக் கல்விப் பணிப்பாளருமான ப.விக்னேஸ்வரன் உள்ளிட்ட மற்றும் பல பிரமுகர்களும், பழைய மாணவர்களும் கலந்துகொள்ளவுள்ளனர்.

கல்லூரியின் நிறுவுனர் மழவராயர் கந்தையாவால் வித்தியாரம்பம் செய்து வைக்கப்பட்ட தினத்தைக் கௌரவிக்கும் நிகழ்வுகளும் அன்றைய தினம் அங்கு இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(உ-18)

## மாபெரும் புத்தாண்டு நிகழ்வு

சுமார் இருதசாப்தங்களாக இடம்பெற்ற யுத்தம் காரணமாக களைத்துப்போயிருந்தவர்களையும், இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த இராணுவச் சிப்பாய்களின் மன நிலையை கட்டியெழுப்பும் நோக்குடன் அரியாலைப் பகுதியில் நிலைகொண்டுள்ள 514வது படையணியின் கட்டளையிடும் அதிகாரி கேணல் ரீ.ஆர்.எல்.எணடனியின் ஆலோசனைக்கமைய அந்தப் பகுதியில் பணி புரியும் 9ஆவது சிங்கரெஜிமெண்ட், 11° (தொண்டர் படை) சிங்கரெஜிமெண்ட் 2வது (தொண்டர்) விஜபாகு போன்ற படைப்பிரிவைச் சேர்ந்த வீரர்கள் கலந்து கொள்ளும் 2004ஆம் ஆண்டின் புதுவருட விளையாட்டுப்போட்டிகள் கடந்த 19ஆம் திகதி 11 தொண்டர் சிங்கரெஜிமெண்ட் நிலை கொண்டுள்ள பகுதியில் அமைந்துள்ள விளையாட்டு மைதானத்தில் நிகழ்வுகள் இடம்பெற்றன.

இந்த நிகழ்வுகள் 51வது சேனாதிபதி பிரிகேடியர் எல்.ஜி. கருணாரத்ன தலைமையில் இடம்பெற்றன.

இந்த நிகழ்வுகளில் யாழ்ப்பாண பொலிஸ் அதிகாரிகளும் கலந்துகொண்டு அவர்கள் இங்கு இடம்பெற்ற விளையாட்டுப் போட்டிகளிலும் கலந்து கொண்டனர். மேலும், பொதுமக்கள் பலரும் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் சி.பத்மநாதன் மற்றும் அரச அதிகாரிகள், வங்கி முகாமையாளர்களும் கலந்து கொண்டார்கள். இந்தநிகழ்வுகளில் இராணுவ வீரர்கள், வீராங்கனைகள் மற்றும் இராணுவத்தில் சிவிலியன்களாகப் பணிபுரிவோர்கள் கலந்துகொண்டனர்.

யானைக்கு கண் வைத்தல், வழுக்கை மரம் ஏறுதல், தடைதாண்டி ஓடுதல், ஆண்/பெண் சட்டி உடைத்தல், மெதுவாக சைக்கிள் ஓட்டுதல், மரதன் ஓட்டப்போட்டி, தலையணை அடித்தல், வினோத உடைப்போட்டி, (ஓலை) கிடுகு பின்னுதல், வட்டக்கா காயினுள் விதைகளை எண்ணுதல் போன்ற போட்டிகள் நடத்தப்பட்டன.

## மிதிவெடி தொடர்பாக மக்களுக்கு விளக்கம்

(பலாலி)

மறவன்புலோ மற்றும் கோவிலாக்கண்டி பகுதியிலுள்ள வீடுகள் மக்களிடம் கையளிக்கப்பட்டுள்ளதுடன், இந்தப் பகுதியில் உள்ள வீடுகளில் மீளக் குடியமர்ந்துள்ள மக்களுக்கு மிதிவெடிகள் மற்றும் வெடிபொருட்களினால் ஏற்படும் விபரிதங்கள் குறித்து மக்களுக்கு விளக்கம் அளிக்கும் கருத்தரங்கு கடந்த திங்கள் அன்று காலை கோவிலாக்கண்டி மகாலட்சுமி வித்தியாலயத்தில் நடத்தப்பட்டது.

அரச சார்பற்ற நிறுவனமான யு.என்.எச்.சி.ஆர் தொண்டர் நிறுவனத்தின் யாழ்.வதிவிடப் பிரதிநிதிகள் 9 பேர் இந்தக் கருத்தரங்கை நடத்தினர். வெடிபொருள், மிதிவெடிகள், கண்ணிவெடிகள் போன்றவைகளை அடையாளம் காண்பது எப்படி என்பதையும், அவ்வாறு வெடி பொருட்கள் தென்பட்டால் அந்தச் சந்தர்ப்பத்தில் செய்ய வேண்டியவை குறித்தும் இந்த நிறுவனப் பிரதிநிதிகள் பொது மக்களுக்கு விளக்கம் அளித்தார்கள்.

இந்தக் கருத்தரங்கு சுமார் ஒரு மணிநேரத்திற்கு இடம் பெற்றதுடன், இந்தக் கருத்தரங்கில் சுமார் 100க்கும் மேற்பட்ட பிரதேசவாசிகள் கலந்து கொண்டார்கள். எட்டாவது பொறியியல் படையினரின் வேண்டுகோளுக்கு இணங்கவே இந்த கருத்தரங்கை யு.என்.எச். சி.ஆர் நிறுவனத்தினர் முன் வந்து செயற்படுத்தினார்கள்.

## [illegible]

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கத்தில் அமைச்சுப் பொறுப்புக்களைப் பொறுப்பேற்றுக் கொண்டவர்களுக்கு செயலாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். சில அமைச்சுக்களின் செயலாளர்களின் விபரம் வருமாறு:

பாதுகாப்பு: சிறில் ஹேரத், உள்துறை, சட்ட அலுவல்கள்: திலக்ரணவிருராஜா, நிதி: டாக்டர் பி.வி.ஜயசுந்தர, கல்வி: டாக்டர் தாராடிமெல், தகவல் தொடர்பாடல்: டபிள்யூ கணஹெல, விளையாட்டு இளைஞர் விவகாரம்: றணுஹா; சமுர்த்தி : டி.ஹபன்கம,

(தி-63)

## கிராமிய திட்டங்களுக்கு உலக வங்கி நிதிஉதவி

(கொழும்பு)

கிராமிய நலன்புரித்திட்டங்களுக்கென உலகவங்கி 51 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்க முன்வந்துள்ளது.

இந் நிதி மொனறாகல, பதுளை, அம்பாந்தோட்டை, மாத்தறை மற்றும் காலி மாவட்டங்களில் உள்ள பின்தங்கிய கிராமங்களின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்படவுள்ளது.

இந்நிதியைப் பயன்படுத்தி முன்னெடுத்துச் செல்லப்படவுள்ள ஆரம்பக்கட்ட நடவடிக்கைகள் அடுத்த மாத முற்பகுதியில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.

(தி-63)

# வாஜ்பாயின் இரட்டை வேடம்

# சோனியா காந்தி கண்டனம்

பிரதமர் வாஜ்பாய் இருவேறு விதமாகப் பேசிவருவதாக காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி



குற்றஞ்சாட்டியுள்ளார்.

கர்நாடக மாநிலம் சிக்கோடி என்னும் இடத்தில் தேர்தல் பொதுக் கூட்டத்தில் பேசிய அவர், வாஜ்பாய் சில சமயம் தத்துவரீதியாகப் பேசுவதாகவும், வேறு சில சமயங்களில் அரசியல் மற்றும் சமுதாயக் கொள்கைகளின் அழிவுக்குக் காரணமாரைப் புகழ்கிறார் என்றும் தெரிவித்தார்.

கூட்டணி அரசுக்குத் தலைமை வகித்துவரும் வாஜ்பாய் வரும் தேர்தலில் பா.ஜ.க. தனித்து ஆட்சியமைக்க மக்கள் வாக்களிக்க வேண்டுமென்று முன்னுக்குப் பின் முரணாகப் பேசி வருகிறார் என்று சோனியா காந்தி கூறினார்.

பின்னர் சிக்மகளூர் என்னும் இடத்தில் பிரசாரம் செய்த சோனியா காந்தி, தமது மாமியார் இந்திராகாந்திக்கு அரசியலில் மறு பிறப்பு அளித்த இடம் சிக்மகளூர் என்பதைச் சுட்டிக் காட்டினார்.

1978 ஆம் ஆண்டு அங்கு நடைபெற்ற இடைத் தேர்தலில் வெற்றிபெற்ற போதிலும் இந்திரா



காந்தியை நாடாளுமன்றத்துக்குள் நுழையவிடாமல் தடுத்தது வாஜ்பாய், அத்வானி ஆகியோர் அங்கம் வகித்த ஜனதா அரசுதான் என்று நினைவு கூர்ந்தார். (து)

சோனியா போட்டியிடும் ரேபரேலி தொகுதி முறைகேடு குறித்துத் தேர்தல் ஆணையத்திடம் பிரியங்கா புகார் மனு கொடுத்தார். அதைத் தொடர்ந்து அந்தத் தொகுதியில் சிறப்புப் பார்வையாளரை நியமிக்க உத்தரவிடப்பட்டது. டில்லி தலைமைத் தேர்தல் ஆணையரிடம் புகார் மனு கொடுத்துவிட்டு பிரியங்கா வெளியே வந்தபோது.





**சட்டீஸ்கர் மாநிலத்தில் நேற்று முன்தினம் காலை வாக்குப்பதிவு தொடங்கி அமைதியான முறையில் நடைபெற்றது. முன்னதாக வாக்குப்பதிவிற்கு வைக்கப்படும் மின்னனு இயந்திரங்கள் முறையாக செயல்படுகின்றனவா என்று பரிசோதனை செய்யும் அதிகாரிகள்.**

## சிறுபான்மையினரும் நாட்டின் குடிமக்களே!

## பிரதமர் வாஜ்பாய் அறிவிப்பு

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே திருப்திகரமான உறவு நிலவுவதாகவும் பயங்கரவாதத்தை ஒருங்கிணைந்து எதிர்க்க இரு நாடுகளும் தயாராக உள்ளன என்றும் பிரதமர் வாஜ்பாய் கூறியிருக்கிறார்.

உத்தரப் பிரதேச மாநிலம் கலீபாபாதில் பொதுக் கூட்டமென்றில் உரையாற்றிய அவர் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுவில் நல்ல மாற்றம் ஏற்பட்டுள்ளது என்றார்.

தமது கருத்துக்களை அடிக்கடி மாற்றிக் கொள்வதாகக் கூறப்படும் குற்றச்சாட்டை மறுத்த வாஜ்பாய், இது போன்று அடிக்கடி கருத்தை மாற்றுகின்ற ஒருவர் 40 ஆண்டுகளாக மக்களவைக்குத் தொடர்ந்து தேர்ந்தெடுக்கப்பட்டிருக்க முடியாது என்று கூறினார்.

நக்சலைட் தீவிரவாதம் குறித்துக் குறிப்பிட்ட பிரதமர் ஆயுதங்களையும், வெடிகுண்டுகளையும், கண்ணிவெடிகளையும் கையில் எடுத்திருப்பவர்கள், காவலர்கள் உள்ளிட்ட ஏராளமான மக்களின் உயிர்களைப் பறித்து வருகின்றனர் என்றும் வன்முறையால் எந்தப் பிரச்சினைக்கும் தீர்வுகாண முடியாது என்பதை அவர்கள் உணரவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

அமைதி மற்றும் சமாதான முயற்சி மூலமே அனைத்துத் துறைகளிலும் வளர்ச்சியை எட்ட முடியுமென்று பிரதமர் குறிப்பிட்டார்.

பா.ஜ.க.மீதும் தேசிய ஜனநாயகக் கூட்டணி மீதும் கொண்டுள்ள கருத்தைச் சிறுபான்மையின மக்கள் மாற்றிக் கொள்ள வேண்டும். என்று வலியுறுத்திய பிரதமர் அந்த மக்களைத் தாங்கள் சகோதரர்களாகவும் நாட்டின் குடிமக்களாகவும் கருதி மதிப்பளிப்பதாகக் குறிப்பிட்டார். (து)

## பல்கலைக் கழக வளாகத்தில் புதிய தலைமைச் செயலகம்

(சென்னை)

சென்னை அண்ணா பல்கலைக் கழக வளாகத்தில் தமிழக அரசு புதிய தலைமைச் செயலகம் கட்டுவதற்கு சென்னை உயர் நீதிமன்றம் அனுமதியளித்துள்ளது.

சுற்றுச்சூழலைக் காரணம் காட்டி மத்திய அரசு பிறப்பித்த அறிவிப்பு தலைமைச் செயலகம் கட்டுவதைக் கட்டுப்படுத்தாது என்று உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி சுபாஷன் ரெட்டி, நீதிபதி ஞானப்பரகாசம் ஆகியோரைக் கொண்ட பெஞ்ச உத்தரவிட்டது.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு தனது கடமைகளை நிறைவேற்ற உரிமை உள்ளது என்றும் தலைமைச் செயலகத்தை மாற்றுவது தொடர்பாக எந்த முடிவும் எடுக்க அரசுக்கு அதிகாரம் உளளது என்றும் நீதிப்திகள் தெரிவித்தார்கள். (து)

## கூட்டணிக் கட்சிகளை மதிப்பதாக வாஜ்பாய் அறிவிப்பு

(சென்னை)

சிறிய கட்சிகளின் முக்கியத்துவத்தை பா.ஜ.க. உணர்ந்துள்ளது என்றும், ஒருகாலத்தில்



தமதுகட்சியும் 2 மக்களவை உறுப்பினர்களைக் கொண்ட சிறிய கட்சியாகத்தான் இருந்தது என்றும் தற்போது அது பெரிய கட்சியாக வளர்ந்து விட்டது என்றும் பிரதமர் வாஜ்பாய் தெரிவித்துள்ளார்.

கூட்டணி காரணமாகத் தான் சலிப்படைத்து விட்டதாக பத்திரிகைகளில் வெளியான செய்திகள் தவறானவை என அவர் குறிப்பிட்டார்.

கூட்டணிக் கட்சிகளை தாம் மதிப்பதாகவும் அதேசமயம் கூட்டணிக் கட்சிகளுடன் அரசு அமைக்க விரும்புவதாகவும் கூறினார்.

நீண்ட காலமாக நாட்டை ஆண்ட காங்கிரஸ் கட்சி வேறு யாரும் தடையில்லாமல் ஆள முடியாது என்று தெரிவித்தது. ஆனால் அந்தக் கருத்தை தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு முறியடித்து விட்டது என்று வாஜ்பாய் சுட்டிக்காட்டினார். (து)

## இலவச சேலை விநியோகம்

## உயிரிழந்தோருக்கு 2 இலட்சம் ரூபா நட்டஈடு வழங்க உத்தரவு

(லக்னோ)

லக்னோ இலவச சேலை விநியோக நெரிசலில் உயிரிழந்தோர் குடும்பங்களுக்கும் காயமடைந்தோருக்கும் வழங்கும் இழப்பீட்டை இரு மடங்காக அதிகரிக்கும்படி உத்தரப்பிரதேச அரசுக்கு அலகாபாத் உயர் நீதிமன்ற லக்னோ பெஞ்ச் உத்தரவிட்டுள்ளது.

இது சம்பந்தமாக பா.ஜ.க. தலைவர் லால்ஜி தாண்டனுக்கும் பிரகேந்திர முராரி யாதவுக்கும் நீதிமன்றம் நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

உயிரிழந்தோர் குடும்பங்களுக்கு தலா இரண்டு இலட்சம் ரூபாவும் காயமடைந்தோருக்கு தலா 50 ஆயிரம் ரூபாவும் வழங்கும்படி நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (து)

## இந்தியச் செய்திகள்

## பொடா வழக்கை நீதிமன்றத்தில் சந்திக்கத் தயார் – வை.கோ.

(சென்னை)

தமிழக அரசு தம் மீது தொடுத்த பொடா வழக்கைத் திரும்பப் பெறாவிட்டால் அதனை நீதிமன்றம் மூலம் சந்திக்கத் தான் தயாராக இருப்பதாக ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வை.கோ. கூறியிருக்கிறார்.

சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், பொடா மறு ஆய்வு மத்திய குழு தம்மீது பொடா சட்டத்தின் கீழ் நடவடிக்கையெடுக்க முதல் நோக்கு ஆதாரம் இல்லையென்று கூறியுள்ளபோதிலும் தமிழக அரசு வழக்கைத் திருப்பப் பெற மறுத்துவிட்டது என்றார்.

ஜெயலலிதா அரசின் பழிவாங்கும் நடவடிக்கையையே இது காட்டுகிறது என்று வை.கோ குறிப்பிட்டார்.

முதலமைச்சர் ஜெயலலிதா தவிர வேறு எந்த அரசியல் தலைவரும் அவதூறுப் பிரசாரத்தில் ஈடுபடவில்லை என அவர் தெரிவித்தார். (து)

## சட்டமன்ற உறுப்பினர் கொலை வழக்கு 16 பேருக்கு ஆயுள் தண்டனை

(சென்னை)

சைதாப் பேட்டை முன்னாள் சட்ட மன்ற உறுப்பினர் என்.கே.பாலன் கொலைவழக்கில் 16 பேருக்கு ஆயுள் தண்டனை விதித்து சென்னை விரைவு நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

கடந்த 2001ஆம் ஆண்டு என்.கே.பாலன் மர்மமான முறையில் கடத்திக் கொலை செய்யப்பட்டார். இந்த வழக்கில் கைது செய்யப்பட்ட 18 பேரில் இருவரை மட்டும் விடுதலை செய்த நீதிபதி அசோகன், இரண்டு பேருக்கு இரட்டை ஆயுள் தண்டனையும் 14 பேருக்கு ஆயுள் தண்டனையும் விதித்த தீர்ப்பளித்தார்.

இதேபோல தி.மு.க பிரமுகர் சென்னை அண்ணா மன்ற ஜெயக்குமார் கொலை வழக்கிலும் விரைவு நீதிமன்றம் 9பேருக்கு ஆயுள் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது. (து)



**முதற் கட்டமாக 140 தொகுதிகளில் நேற்று முன்தினம் வாக்குப் பதிவு நடைபெற்றது. இதற்காக அசாம் மாநிலத்தில் காட்டுப் பகுதிகளில் அமைக்கப்பட்டிருக்கும் வாக்குச் சாவடிகளுக்கு மின்னனு வாக்குப்பதிவு இயந்திரங்கள் யானைகள் மூலம் கொண்டு செல்லப்பட்டும் காட்சி.**

# முதலாவது போட்டியில் இலங்கைக்கு வெற்றி


சிம்பாப்வேக்கு கிரிக்கெற் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணிக்கும் சிம்பாப்வே அணிக்குமிடையில் நேற்று முன்தினம் புலோவாயோவில் நடைபெற்ற முதலாவது ஒருநாள் சர்வதேச கிரிக்கெற் போட்டியில் இலங்கை அணி டக்வோர்த் லூயிஸ் முறைக்கமைய 6 விக்கெற்றுக்களால் வெற்றி பெற்றுள்ளது. இப் போட்டியில் முன்னதாகத் துடுப்பெடுத்தாடிய சிம்பாப்வே அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்முடிவில் 6 விக்கெற்றை இழநது 211ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. சிம்பாப்வே அணிக்கு முதல் தடவையாகத் தலைமைதாங்கிய 21வயதுடைய இளம்வீரரான டைபு மிகத்திறமையாகத் துடுப்பெடுத்தாடி ஆட்டமிழக்காமல் 96ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்திருந்தார். சிம்பாப்வே அணி இரண்டு ஓட்டங்களுக்கு ஒரு விக்கெற் என்ற இக்கட்டான நிலையில் களமிறங்கிய டைபு, இலங்கை அணியின் பந்துவீச்சாளர்கள் அனைவரதும் பந்துகளை மன உறுதியுடன் எதிர்கொண்டு சாவகாசமாக ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்துத் தனது அணியை கௌரவமான நிலைக்கு இட்டுச்சென்றார்.

இவருக்கு பக்கபலமாகத் துடுப்பெடுத்தாடிய மரிக்வீட் 37 ஓட்டங்களையும், இன்காலா ஆட்டமிழக்காமல் 33 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்திருந்தனர். இலங்கையணியின் பந்துவீச்சில் நுவான் சௌயிஸா 21 ஓட்டங்களைக் கொடுத்து 3விக்கெற்றுக்களைக் கைப்பற்றியிருந்தார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இலங்கையணியினர் 2 விக்கெற் இழப்பிற்கு 38ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது மழைகாரணமாக ஆட்டம் தடைப்பட்டது. எனினும் $1\frac{1}{2}$ மணித்தியாலங்களின் பின்னர் ஆட்டம் தொடரப்பட்ட போது 33ஓவர்களில் 173ஓட்டங்களை இலங்கை அணி பெற்றால் வெற்றியென டக்வோர்த லூயிஸ் முறைக்கமைய ஆட்டம் தொடரப்பட்ட போது 27ஓவர் முடிவில் 4விக்கெற் இழப்பிற்கு 144 ஓட்டங்களை பெற்றிருந்தபோது மீண்டும் மழை காரணமாக ஆட்டம் பாதிக்கப்பட்டது. தொடர்ந்தும் ஆடமுடியாத நிலையில் 27ஓவர் முடிவில் டக்வோர்த் லூயிஸ் முறைக்கமைய ஓட்ட விகிதத்தை இலங்கையணி பெற்றிருந்தமையினால் 6விக்கெற்றுக்களால் இலங்கையணி வெற்றிபெற்றதாக போட்டி மத்தி யஸ்தர் அறிவித்திருந்தார்.

துடுப்பாட்டத்தில் இலங்கையணி சார்பில் குமார் சங்ககார 73 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்திருந்தார். இந்த போட்டியில் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடி ஆட்டமிழக்காமல் 96 ஓட்டங்களைப் பெற்றிருந்த டைபு ஆட்ட நாயகனாகத் தெரிவுசெய்யப்பட்டிருந்தார்.

இந்த வெற்றியை அடுத்து ஐந்து போட்டிகள் கொண்ட இந்த ஒருநாள் சர்வதேச போட்டித் தொடரில் இலங்கை அணி 1:0 என்ற ஆட்டக் கணக்கில் முன்னணியில் உள்ளது. (யே-68,10)



சிக்காகோவில் நடைபெறும் அமெரிக்க தேசியக் கூடைப்பந்தாட்டப் போட்டிகளில் சிக்காகோ புள்ஸ் அணியின் நட்சத்திர வீரர் மைக்கல் ஜோர்டன் (இலக்கம் 3) கெனஸி அணியின் வீரரைத் தடுத்து விளையாடுவதைப் படத்தில் காண்கிறீர்கள். இப் போட்டியில் புள்ஸ் அணியினர் 82:76 என்ற புள்ளிக்கணக்கில் வெற்றிபெற்றனர்.

# மேற்கிந்திய தீவுகள் அணிக்கெதிரான பங்களாதேஷ் அணி விபரம் அறிவிப்பு

மூன்று ஒருநாள் சர்வதேச கிரிக்கெற் போட்டிகளிலும் இரண்டு டெஸ்ட் போட்டிகளிலும் விளையாடும் முகமாக பங்களாதேஷ் அணி மேற்கிந்தியத் தீவுகளுக்கான கிரிக்கெற் சுற்றுப்பயணம் ஒன்றை மேற்கொள்ளவிருக்கின்றது. இந்தக் கிரிக்கெற் போட்டித் தொடர்களில் கலந்துகொள்ளவுள்ள பங்களாதேஷ் கிரிக்கெற் அணியின் பெயர் விபரங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இதற்கமைய அணியில் இடம் பெறும் வீரர்களின் விபரம் வருமாறு,

ஹபிபுல் பஸ்ஸார் (அணித் தலைவர்) ராஜின்ஸாலே, ஹணான் ஸர்க்கார், ஸோரியால் குஸைன், முகமட் அஸ்ரப்புல், அலோக்க பாலி, முஜிபுர்றகுமான், ஹாலின் ம.்.முட், ஹாலின்மசூட், முகமட் ராபிக, மஞ்சூரான் இஸ்லாம், பைஸல் குஸைன், தபால் பர்ஸஸயா, தாரிக்ஹரீஸ், அப்துல் றசாக, யாவிட உமர், இனமுல்ஹக்யூனியா, அலென் ஜெபின் ஹவர் ஆகியோரது பெயர் விபரங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

தற்போது இங்கிலாந்து அணிக்கும் மேற்கிந்திய தீவுகள் அணிக்கும் இடையில் நடைபெற்றுவரும் ஒருநாள் சர்வதேச போட்டித்தொடர் நிறைவடைந்ததும், பங்களாதேஷ் மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கிடையிலான டெஸ்ட் போட்டித் தொடர் ஆரம்பமாக இருக்கின்றது. (யே-68)

# துரையப்பா அரங்கில் பதுளை எதிர் யாழ்.லீக்

(யாழ்ப்பாணம்)

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனம் நடாத்திவரும் "எவரெடி" வெற்றிக்கிண்ணத்திற்கான 19வயதுக்குட்பட்டோரின் உதைபந்தாட்டப் போட்டியொன்று யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

மேற்படி போட்டி எதிர்வரும் 24ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4.00மணிக்கு இடம்பெறும் இப் போட்டியில் பதுளை உதைபந்தாட்ட லீக்கை எதிர்த்து யாழ்.உதைபந்தாட்ட லீக் மோதும் என்று அறிவிக்கப்படுகிறது.

(யே)

# முரளியின் 'தூஸ்ராவுக்கு' ஐ. சி. சி யின் தடை

இலங்கை அணியின் நட்சத்திர சூழல் பந்து வீச்சாளரான முத்தையா முரளிதரன் தொடர்ந்தும் தூஸ்ராப் பந்து வீச்சுப்பாணியைப் பயன்படுத்தினால் அவருக்கு எதிராக 12மாதகால போட்டித் தடைவிதிககப்படும் என சர்வதேச கிரிக்கெற் பேரவை அறிவித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. முரளிதரனின் தூஸ்ரா பந்து வீச்சுமுறை சர்வதேச கிரிக்கெற் பேரவையின் உத்தியோகபூர்வ கிரிக்கெற் வழிகாட்டல்களுக்கு முற்றிலும் புறம்பானது என்று மேலும் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

கடந்த மாத இறுதியில் மேற்கு அவுஸ்திரேலிய பல்கலைக்கழகத்தில் முரளிதரனின் பந்துவீச்சுப்பாணி தொடர்பான பரிசேதனைகளுக்கு அவர் தோற்றியிருந்தமை அனைவரும் அறிந்ததே. அதன் பின்னர் சர்வதேச கிரிக்கெற் பேரவையின் உடற்கூற்று நிபுணரும் மேற்கு அவுஸ்திரேலிய பல்கழைக்கழகப் பேராசிரியருமான புரூஸ் எலியட் இந்த பந்து வீச்சினை சாவதேச கிரிக்கெற் பேரவையின் இறுதியறிக்கை வெளியிடப்படும் வரை முரளிதரன் தொடரலாமெனத் தெரிவித்திருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கவை.

இது தொடர்பாகக் கருத்துத் தெரிவிததிருந்த இலங்கை கிரிக்கெற் தலைவரான மொகாண்டி சில்வா அவர்களும் முரளிதரனின் தூஸ்ரா பந்துவீச்சுப் பாணியைத் தொடர்ந்தும் அவர் பாவிப்பதற்கு அனுமதிக்கப்படும் என தான் எதிர்பார்ப்பதாகவே கூறியிருந்தார்.

எனினும் இவ் எதிர்பார்ப்புக்கள் அனைத்தையும் கலைத்துவிட்டது ஐ.சி.சி.யின் இந்த அறிவிப்பு. வழமையான சர்வதேச கிரிக்கெற் பேரவையின் உத்தியோகபூர்வ கிரிக்கெற் வழிகாட்டலுக்கு அமைய சூழற பந்து வீச்சாளர் ஒருவர் 10 பாகை வளைவில் பந்துவீச அனுமதிக்கப் படுவார்கள். எனினும் முரளிதரனின் இந்த தூஸ்ரா பந்து வீச்சுப்பாணி முறை இந்த விதிமுறைகளை முற்றாக மீறியிருப்பதாக சர்வதேச கிரிக்கெற் பேரவையின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது.(யே-68)



அவுஸ்திரேலியாவில் நடைபெறும் அலைச் சறுக்கல் போட்டிகளில் பங்கெடுத்துக்கொள்ளும் அவுஸ்திரேலியாவின் முன்னணி வீராங்கனையான கெனின் றொட்மனைப் படத்தில் காண்கிறீர்கள்.

## விளையாட்டுச் செய்திகள்

# பொஸ்ரன் மரதனில் கென்யருக்கு முதலிடம்

உலகின் புகழ் பெற்ற மரதன் ஓட்டப்போட்டி நிகழ்வான பொஸ்ரன் மரதன் ஓட்டப்போட்டியில் ஆண்கள் பிரிவில் கென்யவீரரான திமோத்தி ஸர்கெட் வெற்றி பெற்றிருக்கிறார்.

42.195 கிலோ மீற்றர் தூரம் கொண்ட இந்த மரதன் ஓட்டப்போட்டியை 2மணித்தியாலங்கள் 10நிமிடங்கள் 40விநாடிகளில் ஓடி முடித்து இவர் முதலாம் இடத்தினைப் பெற்றிருக்கிறார்.

இதேவளை, பெண்களுக்கான மரதன் ஓட்டத்தில் கென்ய வீராங்கனையான கெபரின் இன்றோபா வெற்றி பெற்றிருக்கின்றார்.இவர் இந்த தூரத்தினை 2மணித்தியாலங்கள் 24நிமிடங்கள் 27 விநாடிகளில் ஓடிமுடித்து முதலாம் இடத்தினைப பெற்றார்.

ஆண்கள்,பெண்கள ஆகிய இரு பிரிவிலும் கென்ய நாட்டு வீர, வீராங்கனைகள் வெற்றி பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

(யே-68)

# ஐ.சி.சியின் ஒருநாள் தரப்படுத்தல் பட்டியல்

சர்வதேச கிரிக்கெற் பேரவையினால் ஒருநாள் சர்வதேச கிரிக்கெற் போட்டிகளில் விளையாடும் நாடுகளின் தரப்படுத்தல் பட்டியல் அண்மையில் வெளியிடப்பட்டிருககினறது. இதன்படி அவுஸ்திரேலிய அணி தொடர்ந்தும் ஒருநாள் சர்வதேச போட்டிகளுக்கான தரப்படுததல் பட்டியலில் 135புள்ளிகளுடன் முதலிடத்தில் இருக்கின்றது.

இதேவேளை, தென்னாபிரிக்க அணி 113 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்திலும் இலங்கை மற்றும் நியூசிலாந்து அணிகள் தலா 109புள்ளிகளைப் பெற்றிருந்தாலும் விளையாடியுள்ள ஆட்டங்களின் சராசரிப் பெறுபேறுகளின்படி இலங்கை அணி மூனறாம் இடத்தினைத் தக்கவைத்துக்கொணடுள்ளது. ஒருநாள் சர்வதேச போட்டிகளுக்கான ஐ.சி.சி.யின் தரப்படுத்தல் பட்டியல் வருமாறு:

**ஒருநாள் சர்வதேசப் போட்டிகளுக்கான தரப்படுத்தல் பட்டியல்**

| இல. | நாடு | பெற்றுள்ள புள்ளிகள் | நிலை |
|---|---|---|---|
| 01 | அவுஸ்திரேலியா | 135 | 01 இடம் |
| 02 | தென்னாபிரிக்கா | 113 | 02 |
| 03 | இலங்கை | 109 | 03 |
| 04 | நியூசிலாந்து | 109 | 04 |
| 05 | இங்கிலாந்து | 108 | 05 |
| 06 | இந்தியா | 107 | 06 |
| 07 | பாகிஸ்தான் | 106 | 07 |
| 08 | மேற்கிந்திய தீவுகள் | 100 | 08 |
| 09 | சிம்பாப்வே | 64 | 09 |
| 10 | கென்யா | 28 | 10 |
| 11 | பங்களாதேஷ் | 03 | 11 |

# வீரவேங்கை காவேரி நினைவுச் சுற்றுப்போட்டி

தமிழீழ விளையாட்டுத்துறையினரின் ஆதரவில் வட அல்வை இளங்கோ விளையாட்டுக்கழகம் நடாத்தும் மின்னொளியிலான வீரவேங்கை காவேரி ஞாபகார்த்த வலைப்பந்தாட்ட சுற்றுப்போட்டி இனறு பிற்பகல் 4.00 மணிக்கு கோலாகலமாக ஆரம்பமாகிறது.

இறுதிப் போட்டிகள் நாளை மறுதினம் சனிக்கிழமை பி.ப.4.00 மணிக்கு ஆரம்பமாகும். இப் போட்டிக்கு பிரதம விருந்தினராக பருத்தித்துறை பிரதேச செயலர் திரு. ஆ.சிவசுவாமி அவர்கள் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

இறுதிப் போட்டியில் வெற்றியீட்டும் கழகத்திற்கு 4அடி உயரமுள்ள சுற்றுக்கிண்ணமும், வெற்றிக்கிண்ணமும் இன்னும் பல பெறுமதியான பரிசில்களும் வழங்கப்படும். (யே)

# இன்று ஒரு தகவல்

## ஆயுள் அதிகமாக

இந்தியாவில் ஒரு மனிதனுடைய சராசரி ஆயுள் காலம் ஆணுக்கு 67, பெண்ணுக்கு 70 அது சரி இதில் ஏன்இந்த 3 ஆணடு வித்தியாசம்? ஆண்களின் ஆயுள்காலம் பெண்களை விட மூன்று மடங்கு குறைவாக இருப்பதற்கு என்ன காரணம்?

இதயநோய் சிகிச்சை நிபுணர் ஒருவர் என்ன சொல்கிறர் என்றால ஆண்களில் பலபேர் பீடி ,சிகரெட் குடிக்கிறார்கள் அது தான் காரணம் என்கிறார். மனிதனின் ஆயுள் என்கிறோம். மனிதனின் வாழ்நாள் என்கிறோம். இவ்இரண்டிலும் வித்தியாசம் உண்டு. நோய் நொடி எதுவும் வராமலிருந்தால் மனிதன் 80 வயதிற்கு மேல் நன்றாக வாழலாம் இது மனிதனின் வாழ்நாள் **(life Expectancy).**

ஆனால் மனிதனுடைய ஆயுள என்பது பரம்பரையைப் பொறுத்த விஷயம். மரபணுக்களைப் பொறுத்த விஷயம். இதெல்லாம் ஒருபுறமிருக்கட்டும். இந்த உலகில் வாழ்பவர்கள் இன்னுமொரு 10,15 வருடங்கள் கூடுதலாக இங்கு வாழ வேண்டுமானால் அதற்கு ஏதாவது வழி உண்டா? நவீன மருத்துவ ஆய்வுகள் அதற்கு 10 வழிகளைச் சொல்லியிருக்கிறது.. அவற்றைப் பற்றி இப்போது பார்க்கலாம்.

முதலில் ஒரு நாளைக்கு ஒருவேளை உணவை முழுமையாக மனநிறைவுடன் உண்ணுங்கள். இரண்டாவது தினமும் ஒரே மாதிரியான உணவு வேண்டாம். நாளுக்கு நாள் சாப்பாடு வித்தியாசமாக இருப்பது நல்லது. தினமும் பழம், காய்கறிகள அதிகமாகச் சாப்பிட வேண்டும்.

மூன்றாவது கருத்து வாரத்திற்கு இரு தடவைகளாவது மீன் போன்ற கடல் உணவு நல்லதாம். சைவ உணவுக் காரர்கள இதைக் காதில் வாங்கிக் கொள்ள வேண்டாம் .நான்கா வது கருத்து தினமும் ஒரு நேரமாவது பால் குடியுங்கள். ஐந்தா வது கருத்து மது அருந்த வேண்டாம்.

ஆறாவது கருத்து என்னவென்றால் உடல் எப்போதும் இயங்கிக் கொண்டிருப்பது போல் எதையாவது செய்து கொண்டே இருக்க வேண்டும். சும்மா சோர்ந்து போய் ஒரு மூலையில் உட்கார்ந்துவிடக்கூடாது உடற்பயிற்சி நல்லது.

ஏழாவது கருத்து தாகம் எடுக்குமளவுக்கு கடுமையான உடற்பயிற்சி வேண்டாம். எட்டாவது கருத்து உணவில் அதிகமாக மாமிசக் கொழுப்பு சேராமல் பார்த்துக் கொள்ள வேண்டும். ஒன்பதாவது கருத்து வாரத்திற்கு 2அல்லது 3தடவைக்குமேல் அசைவம் சாப்பிட வேண்டாம். பத்தா வது கருத்து உடல் எடை அதிகமாகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்

கோபம் போன்ற உணர்ச்சிகளுக்குஅடிக்கடி இடம் கொடுக்க வேண்டாம்.

இநத் பத்துக்கருத்தக்களும் மருதது்வ ஆராய்ச்சி மூலமாக கண்டுபிடிக்கப்பட்ட புதிய கருத்துக்கள். அதனால் இவற்றை மனதில்வைத்து கொண்டு அதற்குத் த்குந்தாற் போல் வழக்கத்தை விட அதிகமாக 10,15 ஆண்டுகள் இந்த உலகில் வாழ முடியும் என்கின்றனர் இந்த மருத்துவர்கள். நம்மில் பலருக்கு இந்த உலகில் அதிகமாய் வாழ வேண்டும்என்பதைவிட அதிக நாள் இளமையாக இருக்க வேண்டும்என்பதில்தான் ஆசை.

இரண்டு வயதான பெரியவர்கள் பேசிக் கொண்டிருந்தார்கள்"வயது ஆக ஆக உடலின் பலம் குறைந்து போகிறது சார்! அதுதான் பயமாக இருக்கிறது" என்றார் ஒருவர். அடுததவர் சொன்னார் "எனக்கு அப்படி இல்லை சார் சின்ன வயதில் [illegible] அதே அளவு பலம் தான் இப்போதும் [illegible]டி?" என்று ஆச்சரியமாகக் கேட்டார்அவர். [illegible]தில் சொல்கிறார்."எங்கள் வீட்டில் ஒரு பெரிய [illegible]கல் உள்ளது சார். சிறுவயதில் எனனால் அதைக் கொஞ்சம் கூட அசைக்க முடியாது. இப்போதும் கொஞ்சம் கூட அசைக்க முடிய வில்லை சார்" என்கிறார்.

**-தென்கச்சி கோ.சுவாமிநாதன்**

# திருமலையில் 5 தினங்கள் மேசன் சிறப்புப் பயிற்சிநெறி

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கு மாகாண தொழிற் துறைத் திணைக்களம் "மிட்சிபி" சீமெந்து கம்பனியுடன் சேர்ந்து திருகோணமலையில் எதிர்வரும 26ஆம்திகதி தொடக்கம் ஐந்து நாட்களுக்கு மேசன் சிறப்புப் பயிற்சி நெறியை நாடத்தவுள்ளது.

இதற்காக 30 பயிலுநர்கள் தெரிவு செய்யப்படவிருக்கிறார் கள். பயிற்சிக்காலத்தின் போது உணவு, தங்குமிடம் என்பன இலவசமாக வழங்கப்படும் அதே நேரம் பயிற்சியின் ஒவ்வொரு நாளுக்கும் ஒவ்வொருவருக்கும் 150 ரூபாப் படி ஊக்குவிப்புப்படியும் பயிற்சி முடிவில் சான்றிதழும் சிறு உபகரணத்தொகுதியும் வழங்கப்படவுள்ளது.

ஆண்டு 6 தேர்ச்சி அடைந்து இரண்டு வருட தொழில் அனுபவம் உள்ளவர்கள் பயிற்சிக்காகத் தெரிவு செய்யப்படவிருக்கிறார்கள்.

இவர்களை எதிர்வரும் 22ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கச்சேரியில் உள்ள மாவட்ட தொழிற் துறை அலுவலகத்திற்கு சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள் ளது. (உ)

# பாதுகாப்பு அமைச்சு ஜனாதிபதி கையில் புலிகளைக் கட்டுப்படுத்த முடிந்ததா?

## ரவூப் ஹக்கீம் கேள்வி



(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளை போரில் ஈடுபடாமல் வைத்துக் கொள்வது தான் மக்கள் ஐக்கிய சுதந்திர முன்னணி அரசாங்கத்தின் தந்திர நோக்கமாகும். ஐக்கியதேசிய முன்னணி அரசாங்கமும் அவ்வாறே செயற்பட்டது. யுத்த நிறுத்த உடன்படிக்கை மீறப்படும் போது உரிய நடவடிக்கை எடுப்பதற்கு களநிலவரம் தடையாக இருக்கின்றது என்பதே யதார்த்தம்.

இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவரும், திகாமடுல்ல மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

வடமேல் மாகாண சபைத் தேர்தலில் குருநாகல் மாவட்டத்தில் போட்டியிடவுள்ள ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் வேட்பாளர்களை ஆதரித்து நேற்று முன் தினம் மாலை பொத்துஹர அலகிதியாவில் நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும்போது அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்தும் பேசுகையில்,

தமிழீழ விடுதலைப் புலிகளால் கிண்ணியாவில் அமைககப்பட்ட குரங்குப்பாஞ்சான் முகாமை அகற்றுவதற்கு அப்போது ஆட்சியில் இருந்த ஐக்கியதேசிய முன்னணி அரசு நடவடிக்கை எடுககவில்லை என்று குற்றம் சுமத்திய ஜனாதிபதி தான் பாதுகாப்பு அமைச்சைப் பொறுப் பேற்றதன் பின்னர் அவ்வாறு செய்ய முன்வந்தாரா? அவ்வாறே தமிழீழ விடுதலைப்புலிகளின் படையணிகள், அவ்வமைப்பில் இருந்து நீக்கப்பட்ட கருணா குழுவினரை தாக்கியழிக்க வடக்கில் இருந்து கிழக்கிறகு நகர்ந்த போது அதனைத் தடுக்க அவரால் முடிந்ததா?

இவை அனைத்தும் களநிலவரத்தின் யதார்த்தத்தை மீறிச் செயற்படுத்த முடியாது என்பதை உணர்த்தவில்லையா ? என அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

இன்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மக்கள் விடுதலை முன்னணியின் கூட்டுக்குள் அகப்பட்டு இருகக கிறார். நடந்து முடிந்த பொதுத்தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி நாடாளுமன்ற ஆசனங்களை ஜே.வி.பியிடம் பறிகொடுத்துள்ளது. இதன் மூலம் அக் கட்சி தனது ஆசனங்களை 4 மடங்காக அதிகரித்துக் கொண்டுள்ளது.

இவற்றினை கண்கொண்டு பார்க்கும்போது காலப் போக்கில் மக்கள் விடுதலை முன்னணியைச் சேர்ந்த ஒருவர் பிரதமராக வரக் கூடிய வாய்ப்பும் ஏற்படும்.

ஸ்ரீலங்கா முஸ்லிம்காங்கிரஸ் கட்சி காலத்தினதும மக்களினதும் தேவைகளுக்கு ஏற்ப சூழலுக்கு ஏற்ற முடிவுகளை எடுக்கும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (தி-63)

# இராசி பலன்

**22.04.2004**

**(சித்திரை 10, வியாழக்கிழமை)**
**திருதியை முன்னிரவு11-59 வரை**
**கார்த்திகை பற்பகல் 1-53வரை**
**இராகுகாலம் 1.30-3.00வரை**
**சுபநேரம் 7.31-9.1**

**சித்தாமிர்தம், கார்த்திகை விரதம்**

**மேடம்**
உஷ்ணவியாதி, மாதர் நட்பு, முயற்சிதாமதம் அதிக வார்த்தை.

**இடபம்**
தேகநலன், போசனசுகம், கௌரவமான நிலை, களஸ்திரநன்மை.

**மிதுனம்**
காரிய அலைச்சல், தனவிரயம், பிரயாணம், சயன சுகக்குறைவு.

**கடகம்**
எடுத்த காரியம் கைகூடும், பொருள் சேர்கை, நல்ல வரவேற்பு, தொழில் சிறப்பு.

**சிங்கம்**
நிலைமாற்றம், நல்லசம்பவம் தொழில் நன்மை, முயற்சி கைகூடும்.

**கன்னி**
புதியதிட்டமிடல், சரீரப்பிரயாசை, முயற்சிதாமதம், பிதாசிந்தை.

**துலாம்**
வாகன பயம், எதிர்பாராத நன்மை, பிறருக்கு உதவுதல், நண்பர்கள் விரோதம்.

**விருச்சிகம்**
சென்ற இடத்தில் சொல்வாக்கு, குடும்ப மகிழ்ச்சி, காரியஅனுகூலம் தொழில் விருத்தி.

**தனுசு**
தேகநலன், பகைவரால்நன்மை, தடைப்பட்ட காரியம் கைகூடும், அதிகாரம்.

**மகரம்**
வியாபாரநன்மை, ரோகநிலை, எடுத்தகருமங்கள் தாமதமாகும், கௌரவக்குறைவு.

**கும்பம்**
உடல்நலக்குறைவு, பெரியோர்மதிப்பு, காரிய தாமதம், திடீர்நன்மை.

**மீனம்**
அன்னயர்சந்திப்பு, உற்சாகம், காரிய நன்மை, தனவரவு.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

*வளவன்*

# 10 இலட்சம் பெறுமதியான சிகரெட்டுக்கள் மீட்பு

(கொழும்பு)

சுமார் 10 இலட்சம் ரூபா பெறுமதியான சட்ட விரோதமான சிகரெட்டுக்களை கட்டுநாயக்க சுங்கத் திணைக்கள அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

வெளிநாடு ஒன்றில் இருந்து இலங்கைக்குள் கடதத முற்பட்ட வேளையில், சுங்கத்திணைக்கள அதிகாரிகள் இச் சிகரெட்டுக்களைக் கைப்பற்றியுள்ளனர்..

இது தொடர்பாக சந்தேகத்தின் பேரில் திணைக்கள அதிகாரிகள் நான்குபேரைக் கைது செய்துள்ளனர். இவர்களில் பெண் ஒருவரும் அடங்குவர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகள் தொடர்ந்தும இடம்பெற்றுவருவதாக உதவி சுங்க அத்தியட்சகர் ஜி. தர்மராசா தெரிவித்தார். (தி-63)

# புல்மோட்டை கடற் பிராந்தியத்தில் பெருமளவு ஆயுதங்கள் மீட்பு

(கொழும்பு)

புல்மோட்டைக்குச் சமீபமாகவுள்ள கடற்பிராந்தியத்தில் இருந்து ஆயுதங்கள் வெடிமருந்துகள் அடங்கிய பெட்டி ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது.

60 யார் ஆழத்தில் இருந்த இந்தப்பெட்டியில் ரி.56 ரகத் துப்பாக்கிகள் உட்பட சுமார் 7 ஆயிரம் ஆயுதங்கள், வெடி மருந்துகள் அந்தப்பெட்டியில் இருந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மீன்பிடித் தொழிலாளர்கள் தெரிவித்த தகவலையடுத்தே சுழியோடிகள் இந்தப் பெட்டியை மீட்டதாகக் கூறப்படுகின்றது. (உ-60,10)

# சபாநாயகர் பதவிக்கு லொக்குபண்டார தெரிவு

(கொழும்பு)

இன்று நடைபெறவுள்ள 13வது பாராளுமன்ற சபாநாயகர் பதவிக்கான தேர்தலில், ஐக்கியதேசியக்கட்சியின் வேட்பாளராக முன்னாள் நீதியமைச்சர் டபிள்யூ ஜே.எம். லொக்குபண்டாரவின் பெயர் பிரேரிக்கப்படவுள்ளது.

நேறறு நடைபெற்ற ஐக்கியதேசியக்கட்சியின் பாராளுமன்றக் குழுக்கூட்டத்தில், ஐக்கியதேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் யாவரும் சேர்ந்து லொக்குபண்டாரவின் பெயரை ஏகமனதாக முன்மொழிந்தார்கள்.

இதேவேளை, தமிழ்த்தேசியக்கூட்டமைப்பினரின் பாராளுமன்றக்குழுக்கூட்டமும் நேற்று நடைபெற்றது.

சபாநாயகர் தெரிவின்போது தாம் கடைப்பிடிக்க வேண்டிய நிலைப்பாடு குறித்து இன்று காலை அறிவிக்கப்படும் என கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார். (உ-60,10)

# வர்த்தகக்குழு டுபாய் பயணம்

(கொழும்பு)

உயர்மட்ட வர்த்தகத் தூதுக்குழு ஒன்று அடுத்த மாத நடுப்பகுதியில் டுபாய்க்கு பயணமாகவுள்ளது.

டுபாய் வர்த்தக கைத்தொழில் சம்மேளன உயர் அதிகாரிகளைச் சந்தித்துக் கலந்துரையாடிய டுபாய்க்கான இலங்கை ஆலோசகர் எச்.ஈ.பீரிஸ் பெர்னாண்டோ இவ் அழைப்பை விடுத்துள்ளார்.

2 கோடியே 30 இலட்சம் ரூபா பெறுமதியான தேயிலை இவ்வாண்டு டுபாய்க்கு ஏற்றுமதி செய்யப்பட்டதும் தெரிந்ததே. (தி-63)

# ஜெயந்திவிழா

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீலஸ்ரீ மௌகுரு கடவுள் சுவாமிகளின் 99வது ஜெயந்திவிழா எதிர்வரும் 27ஆம்திகதி செவ்வாய்க் கிழமை உடுவில் கிழக்கு கடவுள் சந்நிதியில் நடைபெறவுள்ளது.

அனறையதினம் விசேட பூஜை, பிரார்த்தனை, பஜனை ஆராதனைகளும் அதனைத் தொடர்ந்து மகேஸ்வர பூஜையும் இடம்பெறவுள்ளது. (உ)

# தேசவழமை

வரலாற்றுத்துறைப் பேராசிரியர்
சி. பத்மநாதன்
பேராதனைப் பல்கலைக்கழகம்.

111

## ஆறாம் பகுதி
## பரதவர் சாதி வழமை

### 1. பரதவர் பற்றிய சில வரலாற்றுக் குறிப்புகள்

**சமுதாய அமைப்பு**

தொழில், செல்வம், சொத்துடைமை என்பவற்றின் காரணமாகப் பரதவரிடையில் வர்க்க பேதங்கள் ஏற்படலாயின. மீனவர், மாலுமிகள், சங்கு குளிப்போர், முத்துக்குளிப்போர் முதலியோர் பரதவர் சமுதாயத்தின் கீழ் மட்டத்தவராய் இருந்தனர். வணிகர், காமரக்காரர் ஆகியோர் வசதிகொண்டோராய் வாழ்ந்தனர். வாணிபத்தின் பொருட்டுப் பரதவர் இலங்கைக்குப் போவது வழமை. பதினெட்டாம், பத்தொன்பதாம் நூற்றாண்டுகளிலே இலங்கைக்கும் தென்னிந்தியாவுக்கும் இடையிலான வாணிபத்திற் பரதவர் கொண்டிருந்த பங்கு குறிப்பிடத்தக்கது. இலங்கையில் அவர்கள் குறிப்பாகப் பலசரக்கு வியாபாரத்தில் ஈடுபட்டிருந்தார்கள். வாணிபத்தின் மூலமாகச் செல்வம் படைத்த பரதவர் தூத்துக்குடி, மணப்பாடு, வீரபாண்டியன் பட்டினம்,பெரியதாளை ஆகிய இடங்களில் நவீன வாழ்க்கை வசதிபொருந்திய வீடுகளை அமைத்திருந்தனர்.

பரதவர் சமூகத்தின் பெருந் தலைவன்ஜாதித்தலைவன் என்ற பட்டத்தைப் பெற்றிருந்தான். தொம் என்ற கௌரவப் பட்டத்தை ஜாதித் தலைவன் என்ற பட்டப்பெயரோடு சேர்த்துக் கொள்வது போர்த்துக்கேயர் காலம் முதல் வழமையாகியது. ஜாதித்தலைவன் என்ற பட்டம் பரம்பரை உரிமையாக இருந்தது. போர்த்துக்கேயரதும் ஒல்லாந்தரதும் காலங்களிலே பரம்பரை உரிமையான பதவியைப் பெறுவதற்கு அரசாங்க அதிகாரிகளின் அங்கீகாரத்தையும் பெற வேண்டியிருந்தது. பிரித்தானியர் ஆட்சியின் இறுதிக்காலத்தில் அந்தக் கட்டுப்பாடு தளர்த்தப்பட்டது.

ஜாதித்தலைவனின் அதிகாரத்தின் கீழ் அடப்பனார், பட்டங்கட்டி என்ற தலைவர்கள் இருந்தனர். அவர்கள் அனைவரையும் ஜாதித்தலைவனே நியமித்தான். ஊர்களில் வாழும் பரதவரின் சமூக வழமைகளை நிலைநாட்டுவதும், தகராறுகளைத் தீர்ப்பதும், அமைதியைப் பேணுவதும் அவர்களின் பொறுப்பாகும். மகமை, காணிக்கை என்ற வரிகளைக் குடியானவர்களிடமிருந்து சேர்த்துக்கொள்வதற்கு அவர்கள் அதிகாரம் பெற்றிருந்தார்கள். முத்துக்குளிப்பு ,சங்குகுளிப்பு ஆகியவற்றை நடாத்துவதற்கான ஏற்பாடுகளையும் அவர்களே செய்தனர்.

தூத்துக்குடியிற் பரதவர் மேசைக்காரர், காமரக்காரர் என்ற இரு பிரிவினராய் இருந்தனர். ஜாதித்தலைவனின் அதிகாரத்தை ஒப்புக்கொண்டு அவர்களுக்கு ஆதரவாயிருந்து, அவர்களோடு கூடி மேசையிலிருந்து உண்பதற்குத் தகைமை பெற்றவர்கள் மேசைக்காரர் என்று வர்ணிக்கப்பட்டனர். இப்பிரிவினைச் சேர்ந்தவர்கள் பெரும்பான்மையும் செல்வமும் செல்வாக்குமுடைய வணிகராய் விளங்கினர். மாலுமிகளும் மீனவரும் இப்பிரிவிலே சேர்க்கப்படுவதில்லை.

பரதவர் கிறிஸ்தவராயிருந்தும் கலியாணச் சடங்குகளை, இந்துக்களைப்போல, விழாக்கோலமாகவும் பாரம்பரிய முறைப்படியும் கொண்டாடுவர். கிறிஸ்தவ தேவாலயத்தில் இருந்து விழாக்கோலமாக மணமக்களை வீதி வழியாக அழைத்துச் செல்வது வழக்கம். மணமகன் ஜாதித்தலைவனுக்கு உரியனவற்றைப் போன்ற அலங்கார உடைகளை அணிந்து கொள்ளுவான். கலியாண ஊர்வலங்களிற் கொடிகளை ஏந்திச் செல்வார்கள். அவற்றிலே சூரியன்,யானை,மயில்,பனை, பாம்பு, சங்கு, மீன் போன்றவற்றின் உருவங்கள் அமைந்திருக்கும். மணமக்கள் நிலபாவாடை மேல் நடந்து செல்வர். வாசற்படி மறியல் என்பது கலியாணச் சடங்கிலுள்ள ஒரு குறிப்பிடத்தகுந்த நிகழ்ச்சியாகும்.

மாமியின் மகளை அல்லது மாமனின் மகளை ஒருவன் மணந்துகொள்வது முற்கால வழமையாகும். அதுவே முறைக்கலியாணமாகும். பிற சமூகத்தவரிடையிற் போல பரதவரிடையிலும் நவீன மயமாக்கத்தின் விளைவாக மணஉறவுகளைப் பொறுத்தவரையில் மரபு வழியான வழமைகள் மாற்றமடைந்துள்ளன. முறைக்குரிய மைத்துனனை விட்டு வேறொருவனைப் பெண ஒருத்திக்கு மணம் முடித்து வைக்கும்போது மாப்பிள்ளையானவன் பெண்ணை மணந்து கொள்வதற்கு அவளின் மைத்துனனுடைய சம்மதத்தைச் சம்பிரதாய பூர்வமாகக் கேட்டுப் பெற்றுக்கொள்வது வாசற்படி மறியல் எனப்படும். அது மரபிற்கும் மாற்றத்திற்கும் இடையிலான முரண்பாட்டைச் சமயத்தைக் காரணம் காட்டி மறைத்துக்கொள்ளும் சம்பிரதாயமாகும்.

**பரதவரின் சொத்துரிமைகள்**

ஆதன உரிமைகளைப் பொறுத்தவரையிற் பரதவரின் வழமையானது சில அம்சங்களிலே தேசவழமையினை ஒத்திருக்கின்றது. சொத்துகள் எல்லாவற்றையும் முதுசொம், சீதனம்,தேட்டம் என மூன்று வகையாகக் கொள்வது பரதவரின் ஆதியான வழமையாகும். பாகப்பிரிவினையை அவற்றுள் ஒவ்வொன்றும் தனித்தனியாகவே கொள்ளப்பட்டது. முன்னோர்களிடமிருந்து உரிமையின் வழியே ஒருவனுக்குக் கிடைத்த சொம்கள் அவனுடைய முதுசொமாகும்.

பெண்ணொருத்தியைக் கலியாணம் பண்ணிக்கொடுக்கும்போது அவளுக்குச் சில சொத்துகளை எழுதிக் கொடுப்பது வழமை. அவ்வாறாக அவள் பெற்ற உடைமைகள் சீதனம் எனப்படும். வீடு, தோட்டம், நிலம், தங்கநகை, வெண்கலப்பாத்திரம், அடிமைகள், பால்மாடு முதலியன பெண்களுக்குச் சீதனமாகக் கிடைத்தன. சீதன உறுதி மூலம் சொத்துகளைப் பெற்ற பெண்கள் அதற்குப் பின் பெற்றோரின் எஞ்சிய சொத்துகளில் எதுவித உரிமையும் பெறுவதில்லை. ஆனாற் பெண் பிள்ளைகளுக்குச் சீதனம் கொடுக்காது பெற்றோர் இறந்தார்களானாற் பாகப்பிரிவினையின் பெண்பிள்ளைகளுக்கும் ஆண்பிள்ளைகளைப் போலச் சம உரிமை உண்டு.

தேசவழமைப்படி சீதனம் பெற்ற பெண்ணொருத்தி இறக்குமிடத்து அவளின் சீதனம் பிள்ளைகளின் உரிமையாகும். பிள்ளைகளின்றி அவள் மரணமாகிப்போனால் அவளின் சீதனம் பழைய வழமைப்படி தகப்பனுக்கு அல்லது சகோதரருக்கு உரிமையாகும். அவளுக்குப் பிள்ளைகள் இருந்து அவள் இறந்த பின்பு அவர்களும் மரணமாகிப்போனாற் சீதனம் முழுவதும கணவனின் உரிமையாகும். பிள்ளைகள் மீது தகப்பனுக்கே முன்னுரிமை என்ற காரணத்தால்அவர்கள் இறக்குமிடத்து அவர்களுக்குரிய உடைமைகள் யாவும் தகப்பனின் உரிமையாகின.

இலங்கையிலே கற்பிட்டி முதலான இடங்களில் வாழ்ந்த பரதவரிடையே சற்று வேறுபாடான வழமை காணப்பட்டது. கலியாணம் முடித்த பெண்ணொருத்தி,புருஷன் இருக்க பிள்ளை இல்லாது இறந்து போனால் அவளுடைய சீதனத்திலும் தேட்டத்திலும் அரைவாசி புருஷனுக்குச் சேரும். மற்றும் அரைவாசி அவளுடைய பிதா மாதாவுக்குச் சேரும். அதேபோல, கலியாணம் செய்த ஆணொருவன் பிள்ளை இல்லாது இறந்து போனாற் அவனுடைய முதுசொமான ஆதனத்திலும் தேட்டத்திலும் அரைவாசி மனைவிக்கே உரிமையாகும். இவ்வழமை தேசவழமைகுச் சற்று மாறுபட்டதாகும். கணவன், மனைவி ஆகியோரின் முதுசொம், சீதனம் ஆகிய ஒவ்வொன்றும் பிள்ளைகள் இல்லாதவிடத்து அவரவர் உரிமைக்காரரை முழுமையாகச் சேரும் என்பது தேசவழமையின் நியதியாகும்.

முதுசொம்,சீதனம் என்பன தேசவழமைப்படி முறையே ஆண்வழியினருக்கும் பெண்வழியினருக்கும் உரித்தானவை. இத்தகைய கோட்பாடு திருநெல்வேலி மாவட்டத்துப் பரதவர் சாதி வழமையிலும் சில சமயங்களிலே பின்பற்றப்பட்டமை மேல்வரும் குறிப்பினால் உணரப்படும்.

(தொடரும்)

## நீர் நிலைகள் வற்றியதால் வைத்த பயிர்கள் வாட்டம்

(நவக்கிரி)

அச்சுவேலி மற்றும் அதனை அண்டிய கிராமங்களில் நிலவும் நீாத் தட்டுப்பாடு காரணமாக அப்பகுதி விவசாயிகள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

தற்போதைய அதிகரித்த வெப்பம் காரணமாக இப்பகுதி நீர் நிலைகள் வற்றிக்காணப்படுகின்றன.

இதனால், வைத்த பயிர்களுக்கு நீர்பாய்ச்ச முடியாது அவை வாடி இருக்கின்றமையை அவதானிக்க முடிகின்றது.

இதுதவிர, விவசாயிகள் சிலர் குழாய் நீர் மூலம் நீரைப் பெற்று தரும் முயற்சி செய்து வருகின்றனர். (உ-233)

## வறிய மாணவர்களுக்கு உதவ நிதி சேகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ. மாவட்டத்தில் உள்ள வறிய மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்கு உதவும் முகமாக யாழ். மாவட்ட தமிழ் மாணவர் ஒன்றியம் நிதி சேகரிக்கும் முயற்சியில் ஈடுபடவுள்ளனர்.

யாழ். மாவட்டத்தில் உள்ள பல்லாயிரக்கணக்கான வறிய மாணவாகள் தமது குடும்பநிலை காரணமாகவும் யுத்தத்தினால் ஏற்பட்ட பின்னடைவுகள் காரணமாகவும் தமது கல்வியை இடைநிறுத்தவேண்டிய சூழ்நிலை காணப்படுகிறது.

இந் நிலையில் வாழ்ந்துவரும் மாணவர்களுக்கு உதவும் நோக்குடன் எதிர்வரும் 23ஆம் திகதி தொடக்கம் யாழ். மாவட்டம் பூராகவும் இந் நிதி சேகரிக்கும் பணி ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதன்மூலம் பல்லாயிரக்கணக்கான வறிய மாணவர்கள் பலன் பெறுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

(உ-35)

## குண்டு வீச்சில் மரணித்த மக்கள் ஞாபகார்த்தமாக சாவகச்சேரியில் நினைவாலயம்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரிப் பகுதியில் இடம் பெற்ற ஸ்ரீலங்காப் படையினரது குணடு வீச்சுக்களின் போது கொல்லப்பட்ட பொதுமக்களின் நினைவாலயம் ஒன்று நிறுவப்படவுள்ளது.

சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கை மூலம யாழ்ப்பாணத்தையும் வலிகாமத்தையும் படையினர் ஆக்கிரமித்த போது அப் பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் சாவகச்சேரியிலும அதனை அண்டிய பகுதிகளிலும் தஞ்சம் புகுந்திருந்த வேளை மக்களின் இருப்பிடங்களை இலக்கு வைத்து ஸ்ரீலங்காப் படையினர் அவ்வப்போது நடத்திய வான தாக்குதல்களில் ஏராளமான பொதுமக்கள் கொல்லப்பட்டனர். இவர்கள் ஞாபகார்த்தமாக சாவகச்சேரி நகரப்பகுதிகளில் இந் நினைவாலயம் நிறுவப்படவுள்ளது. இதற்குரிய நடவடிக்கைகளை சாவகச்சேரி வணிகாகழகம் மேற்கொண்டு வருகிறது. (உ-35)

## பொதுக் குளக் காணியை பொதுமக்கள் சுவிகரிப்பு

(நவக்கிரி)

அச்சுவேலி பயித்தோலை என்னும் இடத்தில் அமைந்துள்ள பிரப்பன்தாள் குளக் காணியானது மக்களால் சுவிகரிக்கப்பட்டு வருகின்றது.

இக்குளமானது நீண்டகாலமாக எந்தவொரு பிரயோசனமுமின்றி இருந்து வருவதாகவும் மழைக் காலங்களில் நீர் நிறைந்து அருகில் உள்ள குடியிருப்புக்குள் நீர் உட்புகுவதால் அயலில் உள்ளவர்கள் பெரும் சிரமங்களை அனுபவித்து வருகின்றனர்.

மழையினால் அயற்குடியிருப்பாளர்களின் வேலிகள் மண்ணரிப்பால் சீரழிந்து போவதால் புதிதாக வேலிகள் போடுபவர்கள் குளத் துக்குச் சொந்தமான அரச காணிகளுககுள் வேலிகள் போட்டு தமது காணிகளை விஸ்தரித்து வருகின்றனர்.

இப்பிரச்சினையானது அச்சுவேலி தெற்கு கிராம அலுவலரினால் ஆராயப்பட்டு வேலிகளைப பிடுங்குமாறு சம்பந்தப்பட்ட குடியிருப்பாளர்களுக்கு அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது. (உ-233)

அன்பு மாணவர்களே!
உங்கள் வலம்புரியில்
மிக விரைவில் எதிர்பாருங்கள்
சுந்தரின்
5-ம் தர புலமைப் பரீட்சை மாதிரி
வினாத்தாள்கள்.
மு. குறிப்பு: 5-ம் தர புலமைப்பரீட்சை வினாத்தாள்களைப் பெற விரும்பும் பாடசாலை அதிபர்கள்,
நிர்வாக உத்தியோகத்தர்,
வலம்புரி
இல.15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம்.
எனும் முகவரியுடன் தபால் மூலமாகவோ, அன்றி நேரிலோ தொடர்பு கொள்ளவும்.
நிர்வாக
உத்தியோகத்தர்.

# ஈராக்கில் குண்டு வெடிப்பு

## 55 பேர் பலியாகினர்!

### 15சிறுவர்கள் 12பொது மக்கள் அடங்குவர்


(பக்தாத்)

ஈராக்கில் பஸ்ரா நகரில் நேற்றுக் காலை இடம் பெற்ற குண்டு வெடிப்பில் 55பேர் பலியாகினர். இதில் 15 பாடசாலைச் சிறுவர்களும் 12 பொது மக்களும் அடங்குவர் ஏனையோர் பொலிஸார் ஆவர்.

நேற்றுக்காலை சுமார்7.15 மணியளவில் பஸ்ரா நகரின் மூன்று பொலிஸ் நிலையங்கள் மீது மேற்கொள்ளப்பட்ட கார்க்குண்டுத்தாக்குதல்களிலேயே இவ்வனர்த்தம் நிகழ்த்தது.

தாக்குதல் நடைபெற்ற பொலிஸ் நிலையத்திற்கருகால் பாடசாலைச் சிறுவர்களை ஏற்றிக் கொண்டு சென்ற ஒரு பஸ் வண்டியும் தாக்குதலுக்குள்ளானதாகவும் அதில் பயணம் செய்த சிறுவர்களில் 15 பேர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டதாகவும் பலர் காயமடைந்ததாகவும் அறிக்கப்படுகின்றது.

(யே)



இந்தியக் கப்பல் படையில் இன் பாக் டி 84 என் ற அதிவேகக் கப்பல் சேர்க்கப்பட்டுள்ளது. சென்னை துறைமுகத்தில் நடைபெற் ற விழாவில், கிழக்கு பிராந்தியத் தளபதி வைஸ் அட்மிரல் ஓ.பி. பன்சால், இன் பாக் டி 84 கப்பலை நாட்டுக்கு அர்ப்பணித்தார். கப்பல் படையில் சேர்க்கப்பட்டுள்ள டி84 அதிவேகக் கப்பலைககாணகின்றர் கள்.

# முந்நாள் ராணுவத்தளபதி இந்தோ.ஜனாதிபதி தேர்தலில்

முந்நாள் இந்தோனேசிய சர்வதிகாரி சுகார்ட்டோவின் கோல்கார்கட்சி அதன் ஜனாதிபதி வேட்பாளராக முந்நாள் இராணுவத் தளபதி,,ஜெனரல் விராண்டோவை அறிவித்திருக்கிறது.





சுகார்ட்டோவின் ஆட்சியில் இரா ணுவத்தளபதியாக விருந்த விராண்டோ கிழக்குத் தீமோரில் 1500 பொது மக்கள் கொலை செய்யப்படுவதற்குக் காரணமாகவிருந்தவர் என்று ஐக்கிய நாடுகள் சபையால் இடைநிறுத்தப்பட்டவர். என்பது குறிப்பிடத்தக்கது. மனித உரிமை மீறல்களுக்காகவும் இவர் கடுமையாக விமர்சிக்கப்படுகிறர்.

1998ல் ஜனாநாயகப் புரட்சியில் சுகார்ட்டோ, 32வருட ஆட்சியின்பின் வெளியேறினார். அவரது கட்சியும் 1999ல் நடைபெற்ற தேர்தலில் படு மோசமான பின்னடைவைச் சந்தித்து. ஐ.நா.வின் முன் முயற்சியினால் கிழக்குத் தீமோருக்கும் சுதந்திரம் கிடைததது.

ஆயினும் தொடர்ந்து ஆட்சிக்கு வந்த மேகவதி சுகர்ணோ புத்திரி ஊழலை ஒழிக்க எதுவுமே செய்யாமையால் ஏப்ரல் 5ல் நடந்த தேர்தலில் அவர் படுதோல்விய டைத்துள்ளார்.யூலையில் நடைபெறும் ஜனாதிபதி தேர்தலில் முதன் முதலாக ஜனாதிபதி மக்களால் நேரடியாகத் தெரிவு செய்யப்பட விருக்கிறர் இதுவரை காலமும் பாராளுமன்றமே ஜனாதிபதியைத் தெரிவு செய் தது.

(யே)

# போலிப் பால்மாவால் ஏழைக் குழந்தைகள் இறப்பு

(சங்காய்)

அங்கீகாரமற்ற போலிப் பால்மா உட் கொண்ட குழந்தைகளில் 60 பேர் இறந்துள்ளதுடன் 200க்கும் அதிகமான குழந்தைகள் ஆபத்தான நிலையிலிருப்பதாகச் சீன அரசாங்கம் அறிவித்துள்ளது.





சீனாவின் புயாங் மாகாணத்தில மிகவும் வருமானம் குறைந்த விவசாயக் குடும்பங்கள், குறித்த பால் மாவைத் தமது குழந்தைகளுக்கு வழங்கியதாகவும் மூன்று நாட்களில் பல குழந்தைகள் இறந்துவிட்டதாகவும் அறிவிக்கப்படு கிறது.

மேலும் குழந்தைகளின் தலைகள் பெருத்தும் உடல் சிறுத்தும் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.இது தொடர்பில் சீனப் பிரதமரின் உடனடி அறிவுதத்லின் கீழ் அரச உணவு மற்றும் மருந்தாக்க அதிகார சபையினர் உற்பத்தியாளரைக் கண்டறியும் நடவடிக்கைகளில் இறங்கியுள்ளனர்.

(யே)

# சிறை மீது தாக்குதல்

## 2பேர்சாவு 100 பேர் காயம்

(பக்தாத்)

ஈராக் தலைநகர் பக்தாத்தில் உள்ள சிறை வளாகத்தின் மீது கிள்ர்ச்சி வாதிகள் நடத்திய தாக்குதலில் 22 கைதிகள் உயிரிழந்தனர். 100க்கும் அதிகமானோர் காயமடைநதனர்.

அபு கிராய்ப் என்ற இடத்திலுள்ள இந்தச் சிறை அமெரிக்கப் படையினர் தலைமையிலான கூட்டணிப் படையினரின் கட்டுப்பாட்டில் இருந்து வருகிறது. பீரங்கித் தாக்குதலில் உயிரிழந்த கைதிகள் கிரிமினல் குற்றவாளிகளா அல்லது கொரில்லா இயக்கத்தைச் சேர்ந்தவர்களா என்ற விபரம் தெரியவில்லை.

சுமார் 4,400 கைதிகள் அடைத்துவைக்கப்பட்டிருக்கும் இந்தச சிறை சதாம்ஹுசைன் காலத்தில் சித்திரவதைகளுக்குப் பேர்போன இடமாகும்.

12 மோட்டார் ஷெல்கள் இச் சிறையைத்தாக்கினவென்றும் சிறு ஆயுதங்கள் கொண்டும் தீவிரவாதிகள் இச் சிறையைத் தாக்கியதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

(யே)

## உலக தரிசனம்

WORLD NEWS

### பிரிட்டனில் பதின்மர் கைது

(லண்டன்)

இங்கிலாத்தில் கால் பந் தாட்ட போட்டியின் போது மனித குண்டுகளை வெடிக் கவைத்து ஆயிரக்கணக்கான ரசிகர்கணை கொல்வதற்கு திட்டமிட்டிருந்த பயங்கர வாதிகளின் சதி முறியடிக்கப்பட்டது.

பொலிஸார் திறமையாகச் செயற்பட்டு பயங்கர வாதிகள் எனச் சந்தேகிக்கப்படும் 10 பேரைக் கைது செய்தனர்.

லண்டனில் மஞ செஸடா யுனைட்டட் மற்றும் லிவர்பூல் அணிகளுக்கு இடையே எதிர் வரும் சனிக்கிழமை கால்பந்து போட்டி நடக்கவுள்ளது. மிக முக்கிய அணிகளுக்கு இடையே நடைபெறும் இப்போட்டியைக் காண 70 ஆயிரத்திற்கு மேற்பட்ட ரசிகர்கள் திரளுவர் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஸ்டேடியயத்தில் பல்வேறு பகுதிகளிலும் பரவலாக அமரும் வகையில் டிக்கெட்வாங் கியுள்ளன ராம் சதிகாரர்கள்.

இந் நிலையில் வடக்கு மற்றும் மத்திய இங்கிலாந்தில் திங்கட்கிழமை காலையில் நடத்தப்பட்டதொடர் அதிரடி தேடுதல் வேட்டையில் சதிகாரர்கள் அகப்பட்டனா. பிரிட்டிஷ பயங் பரவாத ஒழிப்பு குழுவும் அமெரிக்க அதிகாரிகளும் இணைந்து தேடுதல் வேட்டையில் பங்கேற்றனா.

கைது செய்யப்பட்டவர்கள் பெருமபாலும் முஸ்லிம் இயக்கங் களோடு தொடர்புடையவர்கள என்று தெரிவிககப்படுகின்றது. (யே)






வசூலில் சாதனை புரிந்த மிகப்பிரபலமான பஷன் ஓ.்.ப் கிறைஸ்ட் (கிறிஸ்துவின் பாடுகள்) எனும் படத்தில் இயேசுகிறிஸ்துவாக நடித்த நடிகர் கவியேசலைப் இப் படத்தின் இயக்குநரான மெல்கிப்சன் இயக்குவதை படத்தில் காண்கிறீர்கள். எதிர்பார்க்கப்பட்டதற்கும் மேலாக இப்படம் கிறிஸ்தவர்களது ஈஸ்ரர் காலத்தில் பெருவ சூலை ஏற்படுத்திச் சாதனை புரிந்துள்ளது.

# "கின்னஸின்" பிதாமகர் மக்வேர்ட்டர் மறைந்தார்

(லண்டன்)

உலக சாதனைகளைப் பதிவு செய்யும் "கின்னஸ்" புத்தகததை ஆரம்பித்தவர் என்ற பெருமைக்குரிய நொறிஸ் மக்வேர்ட்டர் தனது 78வது வயதில காலமானார்.





தனது இரட்டைச் சகோதரரான றொஸ்சுடன் இணைந்து 1955ல இவர் இம் முயற்சியைத் தொடங்கினார்.சுமார் 100நாடுகளில் 37 மொழிகளில் வெளியாகும் இப் புததகம் 1955ல் 100 மில்லியன் பிரதிகளை விற்றுச் சாதனை புரிந்தது தொடர்ந்தும் உலகில் வருடா வருடம அதிக பிரதிகள் விற்பனையில் இது சாதனை புரிந்து வருகிறது.

பத்திரிகையாளரும்,விளையாட்டு வீரரும் அரசியல் விமர்சகருமான இவர் தனிமனித சுதந்திரத்தில் மிகுந்த ஈடுபாடு காட்டினார். இவரது சகோதரர் றொஸ் 1975ல் ஐ.ஆர்.ஏ கெரில்லாக்களால் சுடடுக்கொல்லப்பட்டாா. ஆயினும் மனம் தளராது அவர் தமது பணியைத் தொடர்ந்து செய்து வந்தார்.மக்வேர்ட்டருக்கு மனைவியும் இரு பிள்ளை களும் உள்ளனர்.

(யே)

# தைவானில்நிலநடுக்கம

(தைபே)

தைவான் நாட்டின் தென் பகுதியில் செவ்வாய்க் கிழமை லேசான நிலநடுக்கம் ஏற்பட்டது.இது ரிக்டர் அளவு கோலில் 5.1 எனப் பதிவானது.

உயிர்ச் சேதம் அல்லது பொருட்சேதம் குறித்த தகவல எதுவும் கிடைக்கவில்லை டைடுங் கடலோர நகரின் கிழககே 23கி.மீ தொலைவில் இந்த நிலநடுக்கம் இடம்பெற்றது. (யே)

தெரிந்த இனத்தொடு தேர்ந்தெண்ணிச் செய்வார்க்கு
அரும்பொருள் யாதொன்றும் இல்.

- குறள்

வலம்புரி

# சபாநாயகர் தெரிவில் நிதானம் வேண்டும்

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசின் முதலாவது பாராளுமன்றம் இன்று கூடுகின்றது. பிரதமர் பதவியேற்பு, அமைச்சரவை நியமனம் என்பவற்றை அடுத்து பாராளுமன்றத்தில் தமக்கு இருக்கக்கூடியதான பெரும்பான்மை பலத்தை நிரூபிக்கவேண்டிய கட்டம் ஏற்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, ஜே.வி.பி. இணைந்த ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தனது பெரும்பான்மைப் பலத்தை நிரூபிப்பதற்காக உதிரிக் கட்சிகளிடம் கையேந்திநிற்கின்ற போதிலும், எந்தக் கட்சியின் ஆதரவும் இதுவரை கிடைத்ததாகத் தெரியவில்லை. எதுவாயினும் ஏதோவொரு தற்துணிபில் - ஹெல உறுமயவின் ஆதரவு கிடைக்கும் என்ற நம்பிக்கையில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தனது பலத்தை நிரூபிக்கவுள்ளது.

இத்தகைய ஓர் முக்கியமான கட்டத்தில் தமிழ்க் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்களின் தீர்மானங்கள் சமயோசிதமாகவும், தீர்க்கதரிசனமாகவும் இருத்தல் அவசியமாகும். இதனையே தமிழ்க்கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்களுடனான சந்திப்பில் விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனும் வலியுறுத்தியுள்ளார்.

வரலாற்று முக்கியத்தும் வாய்ந்த தலைவர் பிரபாகரனுடனான சந்திப்பு இலங்கையின் அரசியல் வரலாற்றில் ஓர் புதுமையை - தமிழ்மக்களின் பாராளுமன்ற பிரதிநிதித்துவம், தமிழ்மக்கள் சார்புடைய தீர்மானங்களை எடுக்கின்ற ஓர் காலகட்டத்தை தோற்றுவித்துள்ளது,

விடுதலைப்போரில் ஆகுதியான மாவீரர்களின் தியாகத்திற்குக் கிடைத்த வெற்றியாக தேர்தல் முடிவைச் சுட்டிக்காட்டிய தலைவர் பிரபாகரன், தமிழ்மக்களின் நலனுக்காகவும், உரிமைக்காகவும், தமிழ்க்கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்கள் பாடுபடவேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார்.

இவ்வாறு தலைவர் பிரபாகரனால் முன்வைக்கப்பட்ட கோரிக்கையை தமிழ்க் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிரமேற்கொண்டு செயற்படுவது அவசியமாகும். அத்துடன் கடந்தகாலங்களைப் போலன்றி கூட்டமைப்பு எம்.பிக்கள் தத்தம் சொந்த இடங்களில் இருந்து மக்களுக்குச் சேவையாற்ற முன்வரவேண்டும்.

யாழ்ப்பாணத்தில் மக்களின் வாக்குகளைப் பெற்று பாராளுமன்ற உறுப்பினர்களாகிவிட்டு கொழும்பில் தங்கியிருப்பதால் எந்தவித பயனும் மக்களுக்கு ஏற்படமாட்டாது. கடந்தகால வரலாற்றில் இதுவே நடந்துள்ளது. பாராளுமன்ற உறுப்பினர்கள் எப்போதாவது சிலதடவைகள் யாழ்ப்பாணம் வருவதாகவும் மிகுதிக் காலங்களில் கொழும்பில் தாமும் தம் குடும்பமுமாக இருப்பதும் வழக்கமாக இருந்தது. இதன் விளைவாகவே நல்லூர், யாழ்ப்பாணம் போன்ற முக்கிய தொகுதிகளில் அளிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை மிகக்குறைந்த சதவீதத்தைக் காட்டி நின்றது.

எனவே யாழ்ப்பாண மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் தத்தம் தொகுதிகளில் தங்கியிருந்து மக்களுக்குச் சேவையாற்றுவது அவசியமாகும். இவை யாவற்றுக்கும் மேலாக இன்று நடைபெறும் சபாநாயகர் தெரிவில் தமிழ்க் கூட்டமைப்பு எம்.பிக்கள் மிக நிதானமாக - மதியூகத்துடன் நடந்துகொள்ள வேண்டும்.

கடந்த பாராளுமன்ற வரலாற்றில் தமிழ்மக்களின் உரிமைகளுக்காகப் பாராளுமன்றத்தில் குரல்கொடுக்க முற்பட்ட போதெல்லாம் அதனைத் தடுத்துநிறுத்தி அடக்கியவர்கள் சபாநாயகர்கள் என்ற உண்மையை உணர்ந்து கொண்டு இம்முறை நடைபெறுகின்ற 13 வது பாராளுமன்றத்தின் சபாநாயகர் தெரிவில், தமிழ்க்கூட்டமைப்பு தனக்கு இருக்கக்கூடியதான சக்தியை தமிழ்மக்களுக்கு சாதகமான வழியில் பயன்படுத்தவேண்டும்.

# சமாதான முயற்சிகளைத் தொடர்வதில் தம்பி பிரபா மிகவும் ஆர்வமாகவுள்ளார்

## கிளிநொச்சி சந்திப்பின் பின் சம்பந்தன் பேட்டி

(லண்டன்)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் சமாதானப் பேச்சுவார்த்தையை உடனடியாக ஆரம்பிப்பதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை.

இருந்தாலும் சமாதானத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற நிலைப்பாட்டை கைவிடவும் இல்லை. இதனை அனைத்துத் தமிழ பாராளுமன்ற உறுப்பினர்களும் மிக உன்னிப்பாக



அவதானித்து வருகின்றார்கள என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் வெளிநாட்டு ஊடகம் ஒன்றிற்குக் கருத்துத் தெரிவிக்கையில், கூறி யிருக்கின்றார்.


அவர் தொடர்ந்தும் கருத்துத்தெரிவிக்கையில், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தலைவர் வே. பிரபாகரனுக்கும் தமிழ்த் தேசியக்கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையில் நேற்று முன்தினம் கிளிநொச்சி அரசியல்துறை நடுவகப்பணியகத்தில் கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது. கடந்த பொதுத்தேர்தலில் சகல தமிழ்மக்களும் அளித்த தீர்ப்புக் குறித்து வே. பிரபாகரன் எம்மிடம் மகிழ்ச்சி தெரிவித்தார்.

நீண்ட காலத்தின் பின்னர் தமிழ் மக்கள் இப்படி ஒரு பலமான ஆணையை தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு வழங்கியிருப்பது சர்வதேச சமூகத்தின் கவனத்தை ஈர்த்துள்ளது.

அத்துடன், தமிழ் மக்களின் பிரச்சினைகள் எவை என்பதையும் கடந்த பொதுத்தேர்தல் மூலம் தமிழ் மக்கள் சிங்கள அரசுக்கும் சர்வதேச சமூகத்திற்கும் எடுத்துரைத்துள்ளார்கள்.

எனவே, தமிழ் மக்களின் இந்த ஒற்றுமையை நாம் பாதுகாதது அவர்களின் கோரிக்கைகளை அரசுக்கு எடுத்துக் கூறவுள்ளோம்.

வடககு-கிழக்கு மாகாணத்தில் இடைக்கால நிர்வாகத்தை உருவாக்கி சொந்த இடங்களை விட்டு வெளியேறிவாழும் மக்களை மீளக்குடியமர்த்தி அவர்களின் அடிப்படைத்தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும் என்று அரசுக்கு தொடர்ச்சியாக தீவிர மாகவலியுறுத்தவுள் ளோம்.



இதேவேளை, தம்பி பிரபாகரன, சமாதான முயற்சிகள் தொடரவேண்டும் என்பதில் மிக ஆர்வமாக இருக்கின்றார்.

சமாதானப் பேச்சுவார்த்தைகளை அரசு எவ்வளவு துரிதமாக ஆரம்பிக்குமோ அவ்வளவு விரைவில் நிரந்தர சமாதானத்தை உருவாக்க முடியும் என தம்பி பிரபாகரன் நம்புகின்றார்.

இதனாலேயே சமா தானப் பேச்சுவார்த் தைகளை உடனடியாக ஆரம்பிக்க வேண்டும் என்பதை அரசுக்கு தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் வலியுறுத்த வேண்டும் என கேட்கப்பட்டுள்ளோம் என்றார். தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினரான கிங்ஸ்லி இராசநாயகம் தனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜிநாமாச் செய்தமைக்கு என்ன காரணம்? என்பது பற்றி கேட்டபோது,

அதுபற்றித் தாம் கருத்து எதனையும் கூறமுடியாது என்றும் அவர் சுய விருப்பின் பேரிலேயே தனது பதவியை இராஜிநாமாச் செய்தார் என்பதை அவரது இராஜிநாமாக் கடிதம் மூலம் தான் அறிந்துள்ளத்ாகவும் இரா. சம்பந்தன் அந்த ஊடகத்திற்குத் தெரிவித்தார்.

(உ-62,10)

# வயிற்றுப் பிழைப்புக்காக கடவுளின் பெயரை உச்சரிப்போர் பெருகி வருகின்றனர்

## அகில இலங்கை இந்துமாமன்றச் செயலாளர் கவலை

(கொழும்பு)

மக்கள் சேவையை மகேசன் சேவையாக எண்ணியே அகில இலங்கை இந்துமாமன்றம் செயற்பட்டு வருவதாக அதன் செயலாளர் கந்தையா நீலகண்டன் தெரிவித்துள்ளார்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தால் நடத்தப்பட்டு வரும் விடியும்வேளை நிகழ்ச்சித் தொடரில் நேற்று கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது, இந்து மக்களின் அபிவிருத்திக்காகவும் நல உரிமை மேம்பாடுகளுக்காகவும் உழைப்பதற்காக அகில இலங்கை இந்துமாமன்றம் 1996ஆம் ஆண்டு கொழும்பில் ஸ்தாபிக்கப்பட்டது.

இந்து மக்களும், இந்துமத நிறுவனங்களும் மக்கள் சேவைகளில் ஈடுபடுவதில்லை என்ற நீண்டகால விமர்சனங்களுக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்காகப் பல இந்துப்பெரியார்கள் கூடி இச்சங்கத்தை அங்குரார்ப்பணம் செய்து வைத்தனர்.

நாட்டில் ஏற்பட்டயுத்த அனர்த்தங்களால் மக்களது வாழ்வு வேதனையும் சோதனையும் நிறைந்ததாகக் காணப்பட்ட காலத்தில் இவ் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது. தன் சேவையை உடனடியாகவே ஆரம்பிப்பதற்கு தூண்டப்பட்டது. அந்த அடிப்படையில் வடக்கு-கிழக்குப் பகுதியில் இடம்பெற்ற கொடூர யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்காகவும் இடம்பெயர்ந்து வாழந்த மக்களுக்காகவும் பொருளுதவிகள் சதுரஉதவிகள் என்பவற்றை எமது அமைப்பு செய்து வந்தது.

இதற்கு மேலாக யுத்தத்தினாலும் ஏனைய சம்பவங்களாலும் பெற்றோர்கள் உயிரிழந்து போனதால் நிர்க்கதியாக்கப்பட்ட குழந்தைகளை பராமரிக்கும் செயற்திட்டங்களிலும் ஈடுபட்டதுடன் அவர்களுக்குத் தேவையான கற்றல்,விளையாட்டு, இணைபாடவிதான செயற்பாடுகள் அத்தனையும் நிறைந்த அமைதியான வாழ்வினை பெற்றுக் கொடுத்தோம். இதற்கான இல்லங்களை அமைத்து இன்றுவரை பராமரித்து வருகிறோம்.

இவ்வாறான எமது செயற்பாடுகள் இன்று பலராலும் பாராட்டப்பட்டு வருகின்றன. எமது இச் செயற்பாடுகளுக்குத் தறபொழுதும் போதியளவு நிதியுதவிகள் பலராலும் வழங்கப்பட்டு வருகிறது. இது எமதுசெயற்பாடுகளையும் நிர்வாக அமைப்புகளையும் தங்கு தடையின்றி செய்து முடிக்க பெரும் உதவியாக உள்ளது. இதைவிட நாம் மனிதநேய நிதியம் என்ற ஒரு அமைப்பை நிறுவி அதனூடாக பல்வேறு சேவைகளுக்குமான நிதிகளைத் திரட்டி வருகின்றோம். இந்நிதி சேகரிப்புகள் புலம்பெயர்ந்த நம்நாட்டவர்கள் வாழும் வெளிநாடுகளிலும் இடம்பெற்று வருகின்றன.

இவ்வாறு எமக்குக்கிடைக்கும் நிதிகள் வடக்கு-கிழக்குப் பகுதிகளில் இயங்கிவரும் இந்து நிறுவனங்களூடாக திக்கற்றவர்களுக்கு உதவும் விதத்தில் பயன்படுத்தப்பட்டுவருகிறது.

இந்துமக்கள் சார்பாக உலக இந்து மாநாடுகள், கம்பன் விழாக்கள் எனப்பல விழாக்கள் பெரும் கோலாகலமான முறையில் கொண்டாடப்படுகின்றன. இந்துமக்கள் அதிகமாக வாழாததும், பெருமளவில் பங்குபற்றிப் பயன்பெறமுடியாததுமான இடஙகளில் கொண்டாடப்படுகின்றமை கவலைக்குரியதே. இவை எதிர்காலத்திலாவது இந்துமக்கள் அதிகமாக வாழக்கூடியதும் பங்குபற்றக்கூடியதுமான இடங்களில் கொண்டாடப்படவேண்டும். அவற்றில் இந்துமக்களை நல்வழிப்படுத்தக்கூடிய பிரடகடனங்கள் செய்யப்படவேண்டும்.

இத்தகைய கோரிக்கைகளை நாம் முன் வைத்தபோதும் சில பாதுகாப்புக் காரணங்களுக்காகவும் ஏனைய பல காரணங்களுக்காகவும் இறுதியாக நடந்த இந்து மாநாடு கூட கொழும்பிலேயே நடத்தப்பட்டது கவலைக்குரியது.

இதேபோல, நாட்டில் உள்ள இந்து புராதன சின்னங்கள் விசமிகளால் சேதப்படுத்தப்பட்டும் அழிக்கப்பட்டும் வருகின்றன. இதனை நாம் ஒருபோதும் அனுமதிக்கக் கூடாது. உதாரணமாக நுவரேலியாவில் உள்ள மொசாக்கடை நீர்த்தேக்கத்தினால் புராதன இந்து ஆலயம் ஒன்று நீரினுள் மூழ்கியுள்ளது. இவ்வாலயத்தின் புரதான மளிககற்கள் மற்றும் அழகியற்கலை வடிவங்கள் என்பன விசமிகளால் திருடப்பட்டு வருகின்றன.இதனை நாம் கடுமையாக ஆடசேபித்து ஜனாதிபதியிடமும், பொலிஸ்மா அதிபரிடமும இந்துகலாசார விவகார பண்பாட்டலுவல்கள் அமைச்சரிடமும் முறைப்பாடு செய்துள்ளோம். அவர்கள் இது தொடர்பில் கவனமெடுப்பதாகவும் உறுதியளித்துள்ளனர்.

அத்துடன், இன்று ஊடக விளம்பரங்களில் இந்துக் கடவுளர்களின் படங்களை இட்டு இந்து சமயத்தின் தனித்துவத்தை மழுங்கடிக்கச் செய்கின்றனர். இது விசனத்துக்குரிய ஒன்றாகவே காணப்பட்டாலும் இதை நீக்கமுடியாதுள்ளது. காரணம் கடவுளின் பெயரைச் சொல்லியே வயிற்றுப் பிழைப்பை நடத்தும் வழக்கம் இன்றைய இந்து சமுகத்தினிடத்தே உருவாகியுள்ளது இது மாற்றப்பட வேண்டும். ஏனைய மதத்தவர்களைப் போல் நாமும் இறை உருவங்களையும் இறை நாமங்களையும் துஷ்பிரயோகம் செய்யக் கூடாது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-4,60,63)



## சாயி அருளமுதம்

தினமும் நீங்கள் வேலை தொடங்கு முன் ஒரு சில நிமிடங்களுக்காவது கடவுளைத் தியானியுங்கள். நாள் முடியும் போது வேலை முடிந்த பின் கோவில் அல்லது பிரார்த்தனை மண்டபம் போன்ற ஒரு புனிதமான இடத்தில் ஒன்று கூடி இறைவனின் நாமத்தைப் பாடி அவருடைய மகிமையைத் தியானித்து இறைவனுக்கு நன்றி செலுத்துங்கள். அது உங்களை உண்மையான கர்மயோகி ஆக் கும். கர்மவழியில் மாவீரர் ஆக்கவும் கூடும்.

நன்றி

நாளாந்த நற்சிந்தனை

உள்நாட்டு வெளிநாட்டு விமான ரிக்கட் களுக்கும் பார்சல் சேவைகளுக்கும்
MANOJ EXPRESS SERVICE
MANOJ EXPRESS
The Finest Express Service in the Field
இல. 13, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
யாழ்.: 021 222 3916 0777 801038
கொழும்பு: T.P.: 2390128 Fax: 2399650 Mob: 0777 517019



ஸ்ரீ முருகன் ஸ்தாபனத்தாரின் மற்றுமோர் சேவை
வெளிநாடுகளில் வசிக்கும் உறவுகளிடமிருந்து
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்டன் யூனியன் பணம் பரிமாற்றம்
மூலம்
சில நிமிட நேரத்தில் உங்கள் கைகளில் பணம் கிடைக்க
எம்மிடம் நாடுங்கள்
ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்
303 K.K.S. வீதி, யாழ்ப்பாணம்
T.P : 021 222 5392
Fax : 222 3214
E.mail : smskr@eureka.lk
(சி-7311)
சிவன் கோவில் வீதி, காரைநகர் T.P : 0602212472


## ஜே.வி.பியினர்...

பண்டாரவையும், அரசாங்கம் டபிள்யூ குணசேகராவையும் சிபாரிசு செய்திருந்தனர் எனக் கூறப்பட்டாலும், இரு தரப்பினரும் எம்மை அணுகியிருந்தனர். ஆனால, தாம் இன்னமும் தீர்மானிக்கவில்லை. இன்று தான் ஹெல உறுமய தனது நிலைப்பபாட்டைத் தெரிவித்து இருக்கின்றது என்றார்.

மேலும், இன்றைய நிலையில், தேசியப் பிரச்சினை சபாநாயகர் பதவியல்ல. சில அரசியல் வாதிகள் இதனை முக்கிய பிரச்சினை யாக்குகிறார்கள் எனத் தெரிவித்த ஹெல உறுமய தற்போது புலிகள் போர் நிறுத்த உடன்படிக்கையை மீறியமைக்கு ஜனாதிபதியும் ரணில் விக்கிரமசிங்காவுமே பொறுப்பு என்றார். (த-6)

## கூட்டமைப்பு...

விக்கப்படுகின்றது.

விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து நீக்கப்பட்ட கருணா குழுவினரால் மக்களுக்கு ஏற்பட்ட அசம்பாவிதங்கள் குறித்து கலந்துரையாடுவதற்காகவே அவர்கள் அங்கு செல்லவுள்ளனர். (ச)

## காத்தான்குடி மீனவர்கள்

# பிரதேச செயலகத்துக்கு முன்னால் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

தடைசெய்யப்பட்ட டிஸ்கோ வலைகளைப் பயன்படுத்தி மீனவர்கள் மீன்பிடித்து வருவதைக் கண்டித்து காத்தான்குடிப் பிரதேச செயலகத்திற்கு முன்னால் நேற்றுக் காலை ஆர்ப்பாட்டம் ஒன்றில் ஈடுபட்டனர்.

காத்தான்குடிப் பிரதேச செயலகத்திற்கு முன்னால் நேற்றுக் காலை 9.00 மணிக்கு ஆரம்பித்த இவ் ஆர்ப்பாட்டம் நண்பகல் 1.30 மணிவரை நீடித்தது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட தொழிலாளர்கள் டிஸ்கோ வலைகளைப் பயன்படுத்தி மீன்பிடிப்பதை தடை செய்ய வேண்டும் காத்தான்குடிப் பிரதேசத்தில் கடமையாற்றும் மீனவ உத்தியோகத்தர்களை இடமாற்றம் செய்யவேண்டும். டிஸ்கோ வலைகளைப் பயன்படுத்தி மீன்பிடித்து வரும் தொழிலாளர்களுக்கு உடந்தையாக இருக்கும் பொலிஸார் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும் ஆகிய மூன்று கோரிக்கைகளை முன்வைத்தே தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இக்கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்று ஆர்ப்பாட்டத்தின் இறுதியில் காத்தான்குடிப் பிரதேச செயலாளரிடம் கையளிக்கப்பட்டது. இம் மகஜரை ஏற்றுக்கொண்ட பிரதேச செயலர் இது குறித்து எதிர் வரும் 27ஆம் திகதி கூடி ஆராயப் படும் என்றார். (தி-63)

# ஐ. நாவின் பிரதிநிதியாக பேணாட் குணதிலக நியமனம்

(கொழும்பு)

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் உள்ள ஐக்கிய நாடுகள் அமைப்பின் இலங்கையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதியாக பேணாட் குணதிலக நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் இப்பதவியைப் பொறுப்பேற்றதன் பின்னர் இலங்கையின் கனடாவுக்கான உயரிஸ்தானிகராகவும் கடமையாற்றுவார் என வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது. இவர் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தின் ஆட்சிக்காலத்தில் முன்னாள் வெளிவிவகார அமைச்சின் செயலாளராகவும், சமாதானச் செயலகத்தின் பணிப்பாளராகவும் கடமையாற்றினார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (தி-63)

## இராணுவச்...

கைது செய்யப்பட்டுள்ளார் என வெள்ளவத்தைப் பொலிஸ் நிலைய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கைதுசெய்யப்பட்ட இந்நபர் இங்கிலாந்தில் வசித்து வருபவர் என்றும், பல்வேறு கடத்தல் சம்பவங்களுடன் தொடர்புடையவர் என்றும், கைதுசெய்யப்படும்போது அவரிடம் ஏழு போலிக் கடவுச் சீட்டுக்கள் இருந்துள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## ஹெல உறுமய...

பஞ்ஞானந்த தேரர் தேர்தலுக்கு முன்னரே இராஜிநாமா கடிதத்தை சமர்ப்பித்திருந்தார். ஆனால் தேர்தல சட்டத்தின்படி வேட்பாளர் பட்டியலை தாக்கல் செய்தபின் இராஜிநாமா செய்தால் அவர்களின் பெயர்கள் நீக்கப்படமாட்டாது எனத் தெரிவிக்கப் படுகின்றது. மேலும் இவர்கள் இருவருமே ஜாதிக ஹெல உறுமயவின் கொள்கைகளில் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

பாராளுமன்ற சம்பிரதாயங்களின்படி சபாநாயகர் தேர்வுக்கு முன் இராஜிநாமா செய்பவர்கள் பொதுச் செயலாளருக்கு அறிவிக்க வேண்டும். ஆனால் அவர்கள் அவ்வாறு நடந்துகொள்ளவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை கமபஹா எம்.பி ஐ.ம.சு. முன்னணி தரப்பினருடன் சென்று அமர்ந்தால் அவருக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப் படும் என ஹெல உறுமயவின் உடுவே தம்மாலோக தேரர் தெரிவித்துள்ளார். மேலும் அவர் அரச தரப்பினருக்கு ஆதரவாகச் செயற்பட அனுமதிக்கவேண்டாம் என்றும் அவ்வாறு செய்தால் அரசாங்கத்திற்கு நிபந்தனையுடனான ஆதரவைக்கூட வழங்கமாட்டோம் என்றும் தேரர் எச்சரித்தார். (த-6)

# க.பொ.த உயர்தர கலைப்பிரிவு மாணவர்களுக்கு

(யாழ்ப்பாணம்)

க.பொ.த (உயர்தர) பரீட்சைக்கு தோற்றவுள்ள கலைப் பிரிவு மாணவர்களுக்கான இலவச வழிகாட்டல் கருத்தரங்கு நாளையும் நாளை மறுதினமும் யாழ். மத்திய கல்லூரி தம்பர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கு காலை 9.00 மணியிலிருந்து பி.ப. 4.00 மணி வரை நடைபெறவுள்ளது. முதல் நாள் கருத்தரங்கின் போது இந்து நாகரிகம், கிறிஸ்தவம், தமிழ் ஆகிய பாடங்களுக்கான விளக்கங்களும், மறுநாள் கருத்தரங்கில் புவியியல், அளவையியல் ஆகிய பாடங்களுக்கான விளக்கங்களும் அளிக்கப் படவுள்ளது.

வட்மாகாண அதிபர் சங்கம், கோப்பாய் அரிமாக் கழகம், யாழ்.மாவட்ட கல்விமேம்பாட்டுக் கழகம் என்பன இணைந்து நடாத்தும் இவ் வழிகாட்டல் கருத்தரங்கிற்கு பரீட்சைக்கு தோற்றுகின்ற சகல மாணவர்களும் கலந்துகொள்ளலாம். இக்கருத்தரங்கில் கற்பித்தல் மற்றும் பரீட்சை விடைத்தாள் திருத்துவதில் மிகுந்த அனுபவமுடைய ஆசிரியர்களினால் பாடங்களுக்கான விளக்கங்கள் அளிக்கப் படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.(ச)

## சுதந்திர...

சிகளின் சார்பில் சபாநாயகர் பதவிக்கு நிறுத்தவுள்ள வேட்பாளர்களை அறிவிப்பர். இதனைத் தொடர்ந்து பாராளுமன்ற செயலாளர் நாயகம் பிரியாணி விஜயசேகரா சபாநாயகர் தெரிவை நடத்திவைப்பார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சார்பில் டி.யூ. குணசேகராவும், ஐக்கிய தேசிய முன்னணியின் சார்பில் முன்னாள் அமைச்சர் லொக்கு பண்டாரவும் சபாநாயகர் தெரிவில் நிறுத்தப்படவுள்ளனர்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியும், ஐக்கிய தேசிய முன்னணியும் சிறுபான்மைக் கட்சிகளான ஹாதிக ஹெல உறுமய, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகியவற்றின் ஆதரவைக் கோரி சபாநாயகர் தெரிவுக்களத்தில இறங்கியுள்ளன.

இந்தச் சிறுபான்மைக் கட்சிகள் இச்செய்தி எழுதும்வரை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியையா? ஐக்கிய தேசிய முன்னணியையா? ஆதரிப்பதெனத் தீர்மானம் எதுவும் எடுக்கவில்லை என்றும், இன்று காலை பாராளுமன்றம் கூடுவதற்கு முன்பாகவே சபாநாயகர் தெரிவில் யாரை ஆதரிப்பதெனத் தீர்மானிக்கப் போவதாகவும் இக் கட்சிகள் தெரிவித்துள்ள அதேவேளை, சில கட்சிகள் நடுவுநிலை வகிக்கலாம் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இது இவ்வாறு இருக்க இரு பெரும்பான்மைக் கட்சிகளுக்கிடையே சபாநாயகர் தெரிவில் போட்டி நிலவுவதால், போட்டியைத் தவிர்த்து இரண்டு பெரும்பான்மைக் கட்சிகளும் இணைந்து ஜாதிக ஹெல உறுமயவைச் சேர்ந்த ஒருவரைச் சபாநாயகராக்குவதற்கு வாய்ப்புகள் இருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, ஐக்கிய தேசிய முன்னணிக்குள் ஏற்பட்டுள்ள விரக்தி நிலையில் பாதிப்புற்ற சில எம்.பிக்கள் கடைசி நேரத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு ஆதரவு வழங்கலாம் என்றும், இது தொடர்பாக இந்த எம்.பிக்கள் ஜனாதிபதியுடனும் பிரதமருடனும் தொடர்புகளை ஏற்படுத்தியிருப்பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்ற போதிலும், இதனை ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கா மறுத்துள்ளார்.

13வது பாராளுமன்றத்தின் சபாநாயகர் தெரிவை அடுத்து பிரதி சபாநாயகரும், குழுக்களின் தலைவர்களும் தெரிவுசெய்யப்படவுள்ளனர்.

மேற்படி பதவிகளுக்கான தெரிவுகள் முடிவடைந்ததும் சபையின் அமர்வு பிறிதொரு தினத்திற்கு ஒத்திவைக்கப்படலாம் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ம)

## புளியங்குளம்...

இது தொடர்பாக விடுதலைப் புலிகளின் ஊடகப் பேச்சாளர் தயாமாஸ்ரருடன் தொடர்புகொண்டு கேட்டபொழுது, அவ்வாறான சம்பவங்கள் எதுவும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் நடைபெறவில்லையெனத் தெரிவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (த)

## ஜனாதிபதியுடன்...

பிரதமராக நியமிக்கப்பட்ட ராஜபக்ஷ தற்போது ஜே.வி.பியினரின் கோரிக்கைகளிற்கேற்ப மகாவலி அமைச்சை வழங்குவதற்கு விருப்பம் தெரிவித்துள்ளார். இதேவேளை, நேற்றுவரை இம்முட்டுக்கட்டை நிலையை போக்குவதற்குரிய நடவடிக்கைகளில் ஜனாதிபதி மும்முரமாக ஈடுபடவில்லை என க[illegible]தப்படுகிறது. (த-







யாழ்ப்பாணத்தில் 72 வருடகால அனுபவம் பெற்ற மதுபான விற்பனையாளர்கள் மீண்டும் வாடிக்கையாளர் நலன் கருதி
243 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
எனும் முகவரியில் விற்பனையை ஆரம்பித்துள்ளார்கள்
உள்நாட்டு வெளிநாட்டு மதுபான வகைகளை பெற்றுக் கொள்ள நாடுங்கள்
ஆ. வேலுப்பிள்ளை அன் சன்ஸ்
243 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் ஸ்தாபிதம் - 1932
(சி-7352)